# ප්‍රගති වාර්තාව

# முன்னேற்ற அறிக்கை

# Progress Report

# 2024



අග්‍රාමාත්‍ය කාර්යාලය

பிரதம அமைச்சர் அலுவலகம்

**Prime Minister’s Office**

# பிரதமர் அலுவலகம்

# முன்னேற்ற அறிக்கை

# 2024

இலக்கம் 58, சேர் ஏனெர்ஸ்ட் த சில்வா
மாவத்தை
கொழும்பு 07

தொலைபேசி :0112575317
தொலைநகல் :0112575310
மின்னஞ்சல் முகவரி :info@pmoffice.gov.lk
இணையத்தளம் :www.pmoffice.gov.lk

*[வருடாந்தம் பாராளுமன்றத்திற்கு பெற்றுக்கொடுக்கப்படும் 2024.12.31 ஆம் திகதிற்கான முன்னேற்றம் அடங்கிய அறிக்கை]*

# உள்ளடக்கம்


01 அறிமுகம் ........ 1

1.1 அலுவலகத்தின் தூரநோக்கும் செயற்பணியும் ........ 1

1.2 முந்துரிமைகள் ........ 2

02 செயலகம் ........ 4

03 நிருவாகப் பிரிவு ........ 14

3.1 மனித வளங்கள் முகாமைத்துவ விடயங்கள் ........ 14

3.2 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விடயங்கள் ........ 15

3.3 வழங்கல் சேவைகள் மற்றும் பராமரிப்பு சேவை விடயங்கள் ........ 18

04 அபிவிருத்திப் பிரிவு ........ 20

4.1 சர்வதேச உறவு விவகாரங்கள் ........ 20

4.2 மூலோபாய விடயங்கள் ........ 26

4.3 திட்டமிடல் விவகாரங்கள் ........ 34

4.4 பாராளுமன்ற விவகாரங்கள் ........ 35

05 கணக்குகள் பிரிவு ........ 39

06 பொதுமக்கள் தொடர்புப் பிரிவு ........ 40

6.1 ஆலோசனைகள், கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகள் என்பவற்றை வினைத்திறன்வாய்ந்த விதத்தில் குறிப்பீடுசெய்யும் பொருட்டு தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பாடல் உத்திகள் என்பவற்றை பயன்படுத்துதல் ........ 40

6.2 பொதுமக்கள் தொடர்புப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டுள்ள விஷேட பணிகள் ........ 45

**07 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ....................................................48**

**08 சட்டப் பிரிவு ....................................................52**

**09 ஊடகப் பிரிவு ....................................................54**

# 01 அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசினது பிரதமரின் உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுகின்ற இந்த பிரதமர் அலுவலகம், அரச கொள்கைகளுக்கு இணங்க சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை அடையும் நிமித்தம் தேவையான வழிகாட்டலையும், ஒருங்கிணைப்பையும் மற்றும் தலைமைத்துவத்தையும் வழங்குகின்றது.

பிரதமரின் அலுவலகம், இன்றைய சவால்களுக்கு தைரியமாக முகம்கொடுத்து உறுதியான நம்பிக்கையுடன்அத்தகைய சவால்களுக்கு விரைவில் தீர்வுகண்டுமக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவும், கஷ்டமான கடினமான கால கட்டங்களில் அவர்களுக்காக முன்வந்து அந்த அபிலாஷைகளை அவர்கள் அடைந்து கொள்ளும் வகையில்அவர்களுக்கு வழிகாட்டுகின்றது. மேலும், நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குத் தேவையான கொள்கைகளை வகுப்பதிலும், மக்கள் மைய அணுகுமுறையின் மூலம் நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை நிலையான முறையில் அடைந்துகொள்ளத் தேவையான பங்களிப்பையும், வழிகாட்டலையும் சிறந்த ஒருங்கிணைப்பையும் வழங்குவதிலும், சர்வதேச பரஸ்பர உறவுகளை விரிவுபடுத்தும் நோக்கில் இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு பங்களிப்பதிலும் பிரதமர் அலுவலகம் தன்னை தொடர்ச்சியாக ஈடுபடுத்தி வருகின்றது.

கௌரவ கலாநிதி ஹரிணி அமரசூரிய அவர்கள், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 16-வது பிரதமராகவும், இலங்கையின் மூன்றாவது பெண் பிரதமராகவும், 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதிமுதல் பணியாற்றி வருகின்றார். மேலும், கௌரவ தினேஷ் குணவர்தன அவர்கள் இந்த ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் ஒற்றோபர் மாதம் 23 ஆம் திகதி வரை பிரதமராகப் பணியாற்றினார்.

## 1.1 அலுவலகத்தின் தூரநோக்கும் செயற்பணியும்

❖ **தூரநோக்கு**

"சுதந்திரமும், இறைமையும், சௌபாக்கியமும் நிறைந்த ஓர் இலங்கை"

❖ **செயற்பணி**

"இலங்கை மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், அரச, தனியார் நிறுவனங்கள்

வெளிநாட்டுத் தூதரகங்கள், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அரச சாரா அமைப்புகள் என்பவற்றுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பைப் பேணி வளர்த்து, தேவையான ஒரு சிறந்த அரச பொறிமுறைக்கு வழிகாட்டுதல்."

## 1.2 முந்துரிமைகள்

- அரசாங்கத்தின் கொள்கைகளையும் மற்றும் தீர்மானங்களையும் செயற்படுத்த அனைத்து அமைச்சுகளுக்கும் நிறுவனங்களுக்கும் அமைப்புகளுக்கும் தேவையான வழிகாட்டுதலைத் தொடர்ந்து வழங்குதல்.
- தேசிய பொருளாதார செயல்முறையினை வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு புதிய தலையீடுகளை செய்தல்.
- பொருத்தமானவாறு சமூக, பொருளாதார மற்றும் அபிவிருத்தி விடயங்களில் மாகாண, மாவட்ட மற்றும் பிராந்திய மட்டங்களில் நேரடித் தலையீடுகளை செய்தல்.
- கௌரவ பிரதமரின் முன்முயற்சியின் கீழ் நடைபெற்ற பல்வேறு கூட்டங்களினதும் மற்றும் கலந்துரையாடல்களினதும் முன்னேற்றத்தை ஒருங்கிணைத்துபின்னூட்டல் செய்தல் அதே போல் தேவையான வசதிகளை செய்துகொடுத்தல்.
- கௌரவப் பிரதமரிடம் பாராளுமன்றத்தில் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு உடனடியாக பதில்களைத் தயாரித்தல்.
- கௌரவப் பிரதமரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலங்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல்.
- கௌரவ பிரதமருக்கு இராஜதந்திர உறவுகளை பேணி வளர்க்க தேவையான வசதிகளை செய்து கொடுத்தல்.
- கௌரவ பிரதமருக்கு செய்யப்படும் பொதுமக்கள் முறையீடுகளையும் மனக்குறைகளையும் சம்பந்தப்பட்ட உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி, முறையாகப் பின்தொடர்ந்து, நிவாரணம் வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- கௌரவ பிரதமர் கலந்து கொள்ளும் அரச மற்றும் தேசிய விழாக்களையும் மற்றும் விஷேட நிகழ்வுகளையும் ஒருங்கிணைத்து நடத்துதல் அத்துடன் அவை தொடர்பாக ஊடகங்களுக்கு அறியப்படுத்துதல்.

- பிரதமரின் செயலாளர் தலைமையிலான பல குழுக்களுக்கும் மற்றும் கூட்டங்களுக்கும் தேவையான வசதிகளை செய்து கொடுத்து அவற்றை ஒருங்கிணைத்து அவை தொடர்பான முன்னேற்றத்தை பின்னூட்டலின் ஊடாக கண்காணித்தல்.
- கௌரவ பிரதமர் தலைமை வகிக்ககும் அமைச்சரவையால்தாபிக்கப்படும் அதிகாரப்பூர்வ அமைச்சரவை துணைக் குழுக்களுடன் சம்பந்தமான கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுதல்.
- தேசிய விழாக்கர் மற்றும் மத விழாக்கள் மற்றும் சமூக நல சேவைகள் என்பவற்றை அரச நிதியுதவியில் ஏற்பாடு செய்து நடத்துதல்.

## 02 செயலகம்

பிரதமரின் செயலாளருக்கு பிரதமரால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் மற்றும் உத்தரவுகள், அதே போல் திணைக்களத் தலைவர்களுக்கும்,ஒட்டுமொத்த ஊழியர்களுக்கும் பிரதமரின் செயலாளர் நேரடியாக வழங்கும் உத்தரவுகள் என்பவற்றை பிரதமரின் அலுவலக கட்டமைப்பில் உள்ள பதவிகளில் மேல்நிலையிலிருந்து கீழ்நிலை வரை (செங்குத்தாகவும்) மற்றும் பிரிவுகளுக்கு இடையில் (கிடையாகவும்) அறிவிப்பதன் ஊடாக சகல பிரிவுகளுக்கும் இடையில் ஒருங்கிணைப்பை பேணி அந்த கட்டளைகளுடன் தொடர்பான நடவடிக்கைகளை பயனுள்ளதாக செயற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை இந்த செயலகம் எடுக்கின்றது.

- ❖ ஒவ்வொரு பிரிவிற்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகள் பற்றிய இலக்குகள் உகந்த முறையில் அடையப்படுவதை உறுதிசெய்வதற்கான கண்காணிப்பும் முன்னேற்ற மீளாய்வும்.

- ❖ சட்ட ஏற்பாடுகளின் பிராகரம் பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிக்கு சாட்டப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்ற நேரடியாகவும் மறைமுகமாகவும் பிரதிநிதித்துவம் செய்தல்.

- ❖ ஜனாதிபதி செயலகம், அமைச்சரவை அலுவலகம், பொதுத் திறைசேரி, தேசிய கணக்காய்வு அலுவலகம் என்பன அடங்கலாக அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச்சட்டசபைகள் மற்றும் வெளி அரச நிறுவனங்கள் அனைத்திற்கும் ஒரு கேந்திர ஒருங்கிணைப்பு அலகாக தொழிற்படுதல்.

- ❖ தற்போது காணப்படும்முறையியல்களை மிகவும் துல்லியமான மற்றும் வெளிப்படையான முறையியல்களாக மாற்றி,வினைத்திறன் வாய்ந்த மிகவும் பயனுள்ள ஒரு பொறிமுறைக்கு தேவையான புதிய தொழில்நுட்ப அறிவு மற்றும் AAA,BPR போன்ற சாதனப்பொதிகளைப் பயன்படுத்தி அலுவலக முறையியல்களை நவீனமயப்படுத்தி அவற்றை செயற்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டிகளை தயாரித்தல்.

- ❖ உள்ளக கணக்காய்வுப் பிரிவு, சட்டப் பிரிவு, கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம் என்பவற்றினால் சுட்டிக்காட்டப்படும்மேலும் பின்பற்ற வேண்டிய சட்ட விதிகளிலும் மற்றும் விதிமுறைகளிலும் கவனம்

செலுத்திநல்லாட்சி கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மிகவும் துல்லியமான முறையியல்களை தாபித்தல்.

- ❖ பிரதமர், பிரதமரின் செயலாளர் மற்றும் தூதரக/வெளிநாட்டு பிரமுகர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல்களை/கூட்டங்களை ஒருங்கிணைத்தல்.

- ❖ அமைச்சரவை நியமித்த பிரதமரின் செயலாளர் தலைமையிலான குழுக்களின் செயற்பாட்டின் நிமித்தம் உரிய நிறுவனங்களுடனும் பிரதமரின் அலுவலகத்தின் பிரிவுகளுடனும் சரியான முறையில் ஒருங்கிணைந்துதேவைப்படும்போது குழு அறிக்கைகளைத் தயாரித்தல்.

- ❖ அமைச்சரவை நியமிக்கும் கௌரவ பிரதமரின் பங்குபற்றலில்/உறுப்பினர் மற்றும்/அல்லது பிரதமரின் செயலாளரின் உறுப்பினர்கள் அடங்கிய குழுக்களின் செயல்பாட்டிற்காக பிரதமர் அலுவலகத்தின் தொடர்புடைய நிறுவனங்களுடனும் மற்றும் பிரிவுகளுடன் முறையான ஒருங்கிணைப்பு செய்தல்.

- ❖ பிரதமரின் செயலாளருக்கு நேரடியாக அனுப்பப்படுகின்ற மின்னஞ்சல்கள், வாட்ஸ்அப் செய்திகள், தொலைநகல் செய்திகள் மற்றும் கடிதங்கள் என்பவற்றுக்கு உடனடியாக பதிலளித்தல், கருத்துக்களைப் பெறவும் முன்னேற்றம் பற்றி விசாரிக்கவும் தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பின்னூட்டல் செய்தல், முன்னேற்றங்களை மீளாய்வு செய்தல்.

- ❖ பிரதமர் அலுவலகத்தின் கீழ் உள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துடன் (UNDP) இணைந்த CITRA சமூக புத்தாக்க ஆய்வகத்தில், புதிய தொழில்நுட்பம் மற்றும் விஷேட அறிவுஆகியன நெகிழ்ச்சியான அணுகுமுறையின் ஊடாகப் பயன்படுத்தப்பட்டு அந்தந்த தலைப்புகளின் கீழ் பல துறைகளில் டிஜிட்டல் பரிவர்த்தனை முதல் தரவுகளை மையமாகவைத்துநன்காகத்தீர்மானித்தல் மற்றும் தொடர்ச்சியான செயல்முறைகளை மேம்படுத்துதல்ஆகியவற்றின் நிமித்தம் மிகவும் துரிதமான மற்றும் பயனுள்ள ஒரு அரச பொறிமுறையை உருவாக்க தேவையான மனித வளத்திற்கு பயிற்சி அளிக்க வழிகாட்டிகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**2024.09.25 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் செயலகத்தினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டங்களுக்கும் மற்றும் கலந்துரையாடல்களுக்கும் தேவையான ஒருங்கிணைப்புகள் செய்யப்பட்டுள்ளன.**

| # | கலந்துரையாடல்நடத்தப்பட்டுள்ள திகதி | நடத்தப்பட்டுள்ள கலந்துரையாடல்கள் | கலந்துரையாடலின் நோக்கங்கள் |
|---|---|---|---|
| 1. | 2024.09.25 | கௌரவ பிரதமர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியை வகிக்கின்ற அமைச்சுக்களின் செயலாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் | • பிரதமருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சுக்களின் விடயப்பரப்புகளை கண்டறிதல்<br>• தொடர்புடைய ஒவ்வொரு அமைச்சின் கீழும் இயங்கும் நியதிச்சட்டசபைகளின் பொறுப்புப்பணிகள் மற்றும் அந்த நிறுவனங்களின் எதிர்வருகின்ற 06வார காலத்திற்குள் முன்னுரிமை அளிக்க வேண்டிய விடயப் பிரிவுகள் பற்றி ஆராய்ந்து எதிர்கால செயற்பாடுகளை திட்டமிடுதல்<br>• அரசாங்க சேவையையும் மற்றும் அரசியல் அதிகாரத்தையும் பற்றி இலங்கை மக்களின் நம்பிக்கை உறுதிப்படும் விதத்தில் செயல்படுவதன் தேவை தொடர்பாகவும் இதன் போது மேலும் வலியுறுத்தப்பட்டது. |
| 2. | 2024.09.27 | பிரதமரின் அலுவலகத்திலுள்ள தகவுடைய அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | பிரதமர் அலுவலகத்தின் செயற்பாடுகளை வெளிப்படையாகவும் ஒழுங்காகவும் நிருவகித்துச்செல்ல, தகவுடைய அதிகாரிகள் செய்யும் பணிகள் பற்றி அறிந்து கொள்ளுதல். |
| 3. | 2024.09.27 | தரம் 5 புலமைப்பரிசில் வினாத்தாள் வெளியாகியமை | தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ஏற்பட்ட முறைகேடுகள் தொடர்பான முதற்கட்ட விசாரணையின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல். |

| # | கலந்துரையாடல்நடத்தப்பட்டுள்ள திகதி | நடத்தப்பட்டுள்ள கலந்துரையாடல்கள் | கலந்துரையாடலின் நோக்கங்கள் |
|---|---|---|---|
| | | தொடர்பான பிரச்சினை பற்றி இடம்பெற்ற கலந்துரையாடல் | |
| 4. | 2024.09.30 | கௌரவ பிரதமர் அமைச்சுப் பதவிகளை வகிக்கும் அமைச்சுக்களின் ஊடகப் பிரிவு பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | கௌரவ பிரதமர் அமைச்சுப் பதவிகளை வகிக்கும் அமைச்சுக்களின் ஊடகப் பிரிவுக்கு இடையில் ஒருங்கிணைப்பை உரிய முறையில் பேணி மேற்கொள்ள வேண்டிய கரும பணிகள் பற்றி அறிந்து கொள்ளல். |
| 5. | 2024.10.02 | கௌரவ பிரதமர் அமைச்சுப் பதவிகளை வகிக்கும் அமைச்சுக்களின் செயலாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | உரிய அமைச்சுக்களின் திட்டமிடப்பட்டுள்ள மேற்கொள்ள வேண்டிய முன்னுரிமை கரும பணிகள் தொடர்பாக பிரதமருக்கு அறியப்படுத்துதல் மற்றும் பிரமதமரின் அந்தரங்க செயலாளரை நியமித்தல். |
| 6. | 2024.10.07 | கௌரவ பிரதமர் அமைச்சுப் பொறுப்பை வகிக்கும் அமைச்சுக்களின் செயலாளர்களுடன் இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் | உரிய அமைச்சகங்களின் முன்னுரிமைப் பணிகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல். |

| # | கலந்துரையாடல்நடத்தப்பட்டுள்ள திகதி | நடத்தப்பட்டுள்ள கலந்துரையாடல்கள் | கலந்துரையாடலின் நோக்கங்கள் |
|---|---|---|---|
| 7. | 2024.10.07 | எக்ஸ்-பிரஸ் பேர்ல் கப்பல் சம்பவம் தொடர்பான 2024/2025 ஆண்டுகளுக்கான சட்ட மற்றும் நிபுணர் செலவு மதிப்பீடு பற்றிய அமைச்சரவைப் பத்திரத்தின் மீது இடம்பெற்ற கலந்துரையாடல் | எக்ஸ் பிரஸ் பேர்ல் கப்பல் சம்பவம் தொடர்பான 2024/2025 ஆண்டுகளுக்கான சட்ட மற்றும் நிபுணர் செலவு மதிப்பீடு தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனம் பற்றிவிளக்கமளித்தல். |
| 8. | 2024.10.10 | சுகாதார அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துரையாடியதன் பிரகாரம், சுகாதார அமைச்சின் கீழ் உள்ள பல நியதிச்சட்டசபைகளின் தலைவர்களுடன் சுகாதாரத் துறையில் உள்ள பிரச்சினைகள் மற்றும் தேவைகள் பற்றி கலந்துரையாடுதல். |
| 9. | 2024.10.10 | பரீட்சைகள் திணைக்கள அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துரையாடிய பிரகாரம், பரீட்சைகள் தொடர்பான தற்போதைய பிரச்சினைகள் மற்றும் உரிய பிரச்சினைகளுக்கு வழங்கக்கூடிய சிறந்த தீர்வுகள் பற்றிகலந்துரையாடுதல். |
| 10. | 2024.10.10 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடனும் மற்றும் உயர்கல்விப் பிரிவு அதிகாரிகளுடனும் இடம்பெற்ற | உயர்கல்வி தொடர்பான பிரிவுகளிலும் மற்றும் பல்கலைக்கழகங்களிலும் உள்ள நெருக்கடிகளைக் கண்டறிந்து, அதற்காக எடுக்க வேண்டிய அவசர நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடுதல். |

| # | கலந்துரையாடல்நடத்தப்பட்டுள்ள திகதி | நடத்தப்பட்டுள்ள கலந்துரையாடல்கள் | கலந்துரையாடலின் நோக்கங்கள் |
|---|---|---|---|
| | | கலந்துரையாடல்களின் குறிப்புகள் | |
| 11. | 2024.10.12 | அரசாங்கப் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்பான பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல் | ஊழியர்களின் சேவை திருப்திக்காக நிரந்தர தீர்வை எட்டுவதற்கு முன்பு தற்போதுள்ள பிரச்சினையை முழுமையாக ஆராய வேண்டும் என்பதால், தற்பொழுது தேசியப் பாடசாலைகளிலும் மாகாணப் பாடசாலைகளிலும் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (பட்டதாரி மற்றும் பயிற்சி பெற்றவர்கள்) நிரந்தர ஆசிரியர் சேவையில் சேவையிலும்உள்ளீர்க்கப்படாமை தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுதல். |
| 12. | 2024.10.14 | கௌரவ பிரதமர் அமைச்சுப் பொறுப்பை வகிக்கும் அமைச்சுக்களின் செயலாளர்களுடன் இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் | கௌரவ பிரதமர் அவர்களின் கீழ் உள்ள அமைச்சுக்களின் முன்னுரிமைப் பணிகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் புதிய சேவைகள் மற்றும் சமூகத் தேவைகள் ஆகியன தொடர்பான தகவல்களை இற்றைப்படுத்துதல். |
| 13. | 2024.10.17 | பல்கலைக்கழக மாணவர் சங்கங்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் மாணவர் நலன் ஆகியன தொடர்பாக முகம்கொடுக்கும் தீர்க்கப்படாத பிரச்சினைகளை இனங்காணுதல். |
| | | மருத்துவ பீட மாணவர் செயற்குழுவுடன் | |

| # | கலந்துரையாடல்நடத்தப்பட்டுள்ள திகதி | நடத்தப்பட்டுள்ள கலந்துரையாடல்கள் | கலந்துரையாடலின் நோக்கங்கள் |
|---|---|---|---|
| | | இடம்பெற்ற கலந்துரையாடல் | |
| | | பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான பிக்குமாணவர்சங்கத்துடனும் மற்றும் பல்கலைக்கழக மாணவர் சங்கத்துடனும் இடம்பெற்ற கலந்துரையாடல் | |
| 14. | 2024.10.24 | கௌரவ பிரதமர் அமைச்சுப் பொறுப்பை வகிக்கும் அமைச்சுக்களின் செயலாளர்களுடன் இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் | கௌரவ பிரதமர் அவர்களின் கீழ் உள்ள அமைச்சுக்களின் முன்னுரிமைப் பணிகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் புதிய சேவைகள் மற்றும் சமூகத் தேவைகள் தொடர்பான தகவல்களைஇற்றைப்படுத்துதல். |
| 15. | 2024.10.24 | அரச பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்களில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடல் | உள்நாட்டு கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களின் தேவைகள், மருத்துவ மாணவர் நலன்புரி மற்றும் பல்கலைக்கழக மருத்துவ பீடங்களின் பிற தேவைகள் என்பவற்றை கண்டறிந்து, அந்தப் பிரச்சினைகளுக்குப் பொருத்தமான தீர்வுகளை வழங்குவதற்காக இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. |
| 16. | 2024.10.25 | ஆசிரியர்கள் அதிபர்கள் தொழிற்சங்கங்கள | ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தொடர்பான தீர்க்கப்படாத பிரச்சினைகளை இனங்காணுதல். |

| # | கலந்துரையாடல்நடத்தப்பட்டுள்ள திகதி | நடத்தப்பட்டுள்ள கலந்துரையாடல்கள் | கலந்துரையாடலின் நோக்கங்கள் |
|---|---|---|---|
| | | ுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் | |
| | | அதிபர்கள் சேவை சங்கத்துடன் இடம்பெற்ற கூட்டம் | |
| 17. | 2024.10.29 | கௌரவ பிரதமர் அவர்களின் கீழ் உள்ள அமைச்சுக்களின் செயலாளர்களுடன் இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் | கௌரவப் பிரதமர் அமைச்சுப் பதவியை வகிக்கும் அமைச்சுக்களின் விடயப்பரப்பினுள் வரும் அமைச்சுக்களில் தற்பொழுது செயற்படுத்தப்படும் முன்னுரிமை கருமங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் புதிய சேவைகள் மற்றும் சமூக தேவைகள் என்பன தொடர்பான தகவல்களை இற்றைப்படுத்துவது இந்தக் கலந்துரையாடலின் முதன்மை நோக்கமாகவிருந்தது. |
| 18. | 2024.10.31 | இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைபரீட்சாத்திகளின் சங்கம் தொடர்பான பிரச்சினைகள் பற்றி இடம்பெற்ற கலந்துரையாடல் | இலங்கை ஆசிரியர் கல்வியாளர் சேவை மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, நேர்முகப் பரீட்சைக்குதோற்றி, ஆனால் இன்னும் ஆட்சேர்ப்பு செய்யப்படாத பரீட்சாத்திக்முகம்கொடுக்கும் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, உரிய பரீட்சாத்திகளின் வேண்டுகோளின் பேரில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. |
| 19. | 2024.11.05 | கௌரவ பிரதமர் அவர்களின் கீழ் உள்ள அமைச்சுக்களின் செயலாளர்களுடன் இம்பெற்ற | கௌரவப் பிரதமர் அமைச்சுப் பதவியை வகிக்கும் அமைச்சுக்களின் விடயப்பரப்பினுள் வரும் அமைச்சுக்களில் தற்பொழுது செயற்படுத்தப்படும் முன்னுரிமை கருமங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு |

| # | கலந்துரையாடல்நடத்தப்பட்டுள்ள திகதி | நடத்தப்பட்டுள்ள கலந்துரையாடல்கள் | கலந்துரையாடலின் நோக்கங்கள் |
|---|---|---|---|
| | | முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் | செய்தல் மற்றும் புதிய சேவைகள் மற்றும் சமூக தேவைகள் என்பன தொடர்பான தகவல்களை இற்றைப்படுத்துவது இந்தக் கலந்துரையாடலின் முதன்மை நோக்கமாகவிருந்தது. |
| 20. | இந்தக் குழு 2024.12.02 ஆம் திகதிமுதல் 2024.12.31 வரை நடைபெற்றது. | அரசாங்க சேவையில் உள்ள அபிவிருத்திஉத்தியோகத்தர்கள், இணைந்த சேவை வகுதிகளில் உள்ள உத்தியோகத்தர்கள், அரசாங்க சேவையில் இணைவதற்கான அடிப்படைத் தகுதியாக பட்டப்படிப்பைக் கருதாத ஆனால் பட்டப்படிப்புடன் அரசாங்க சேவையில் பல பதவிகளில் ஏற்கனவே உள்ளீர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் அரசாங்க சேவையில் நுழைய எதிர்பார்க்கின்ற பட்டதாரிகள் ஆகியோர்எதிர்நோக்கும் | அரசாங்க சேவையில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், இணைந்த சேவை வகுதிகளில் உள்ள உத்தியோகத்தர்கள், அரசாங்க சேவையில் இணைவதற்கான அடிப்படைத் தகுதியாக பட்டப்படிப்பைக் கருதாத ஆனால் பட்டப்படிப்புடன் அரசாங்க சேவையில் பல பதவிகளில் ஏற்கனவே உள்ளீர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் அரசாங்க சேவையில் நுழைய எதிர்பார்க்கின்ற பட்டதாரிகள் ஆகியோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றை தீர்ப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப குழுவிற்கு உதவவதற்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் குழுவுக்குரிய கருமங்களை நிறைவேற்றுதல். |

| # | கலந்துரையாடல்நடத்தப்பட்டுள்ள திகதி | நடத்தப்பட்டுள்ள கலந்துரையாடல்கள் | கலந்துரையாடலின் நோக்கங்கள் |
|---|---|---|---|
| | | பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றை தீர்ப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப குழுவிற்கு உதவவதற்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் குழு | |

# 03 நிருவாகப் பிரிவு

பிரதமர் அலுவலகத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகையை தரத்தில் உயர்ந்ததாக பேணுவதற்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் பயன்படுத்த தேவையான நிர்வாக, பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை இந்தப் பிரிவு நிர்வகித்து ஒருங்கிணைக்கின்றது. மேலும், இந்தப் பிரிவு பின்வரும் முன்னுரிமைப் பகுதிகளை துணைப் பிரிவுகளாகப் பேணிவருகின்றது.

## 3.1 மனித வளங்கள் முகாமைத்துவ விடயங்கள்

பிரதமர் அலுவலகத்தின் ஒட்டுமொத்த செயல்திறனை தரத்தில் உயர்ந்ததாகபேணுவதற்கு தேவையான மனித வளங்களை திறமையாகவும் மற்றும்வினைத்திறனகாவும் பயன்படுத்த தேவையான நிருவாகப் பணிகள், செயற்பாட்டு முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு முதலிய கருமங்களை இந்தப் பிரிவு மேற்கொள்கின்றது. பிரதமர் அலுவலகத்தில் உள்ள உத்தியோகத்தர்களின் அறிவையும், திறன்களையும், மனோபாவத்தையும் வளர்ப்பதன் மூலம் சேவையின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் அலுவலகப் பணிகளின் செயல்திறனையும் வினைத்திறனையும் மேம்படுத்த வாய்ப்புகளை வழங்குதல் முதலிய நோக்கங்களின் நிமித்தம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உத்தியோகத்தர்களை அனுப்ப இந்தப் பிரிவு நடவடிக்கை எடுக்கின்றது. மேலும் உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் தரத்தையும்மற்றும்அலுவலக உத்தியோகத்தர்களின் சேவையின் தரத்தையும் மேம்படுத்துவதற்கும், அவர்களை ஊக்குவிப்பதற்கும், தொடர்ச்சியாகஅபிவிருத்தி அடைந்து வரும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிறந்த சேவையை வழங்குவதற்கான பணிச்சூழலை உருவாக்குவதற்கு தேவையான பின்னணியும் இந்தப் பிரிவினால் ஏற்படுத்தப்படுகின்றது.

மேலும், இந்தப் பயிற்சிகள் ஊடாக அலுவலக உத்தியோகத்தர்களின் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மை என்பவற்றை மேம்படுத்துவதற்கும், பரஸ்பர கற்றலையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்வதன் ஊடாக சர்வதேச உறவுகள் சங்கிலியை ஏற்படுத்த தேவையான சூழலை உருவாக்குவதற்கும் வாய்ப்பளிக்கப்படுகின்றது.

அதன்படி, பின்வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி பாடநெறிகள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வேலையரங்குகள் என்பன 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரை நடத்தப்பட்டுள்ளன.

- உள்நாட்டு பயிற்சி பாடநெறிகள்/நிகழ்ச்சித் திட்டங்கள்/வேலையரங்குகள்:-23
- வெளிநாட்டு பயிற்சி பாடநெறிகள்/நிகழ்ச்சித் திட்டங்கள்/வேலையரங்குகள்:-15

## 3.2 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விடயங்கள்

அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்தவும், நிறுவன செயல்முறைகளின் செயல்திறனை அதிகரிக்கவும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு பிரதமர் அலுவலகம் நடவடிக்கை எடுக்கின்றது. மேலும், பணிகளை திறமையாகவும் எளிதாகவும் மேற்கொள்ளும் நிமித்தம்உள்நாட்டில் தயாரித்த மென்பொருள் முறைமைகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டுபுதிய தகவல் சார் தொழில்நுட்பப்பிரயோகங்கள் சோதிக்கப்படுகின்றன. எனவே, துல்லியமான தகவல் பரிமாற்றத்தை உறுதிசெய்வதற்கும்சைபர் அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதற்கும்பிரதமர் அலுவலகத்தின் அனைத்து தரவு முறைமைகளுக்கும் சைபர் பாதுகாப்பு ஏற்பாடுகள் செயற்படுத்தப்பட்டு தொடர்ந்து அவை கண்காணிக்கப்படுகின்றன.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உப பிரிவு இந்த காலப் பகுதியினுள் அரச நிறுவனங்களுக்கு அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்டுள்ள தகவல் தொடர்பாடல் மற்றும் சைபர் பாதுகாப்புக் கொள்கையை பிரதமரின் அலுவலகத்தினுள் செயற்படுத்த நடவடிக்கை எடுத்தது. இதன் போது தொழில்நுட்பத்திற்கு மிகச்சிறந்த ஆயத்தமான ஒரு அரச நிறுவனம் என மதிக்கப்பட்டு தகவல் முறைமை கணக்காய்வு மத்திய சங்க (Information System Audit Central Association (ISACA)விருது பிரதமர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டது. இதனை ஒரு பெரும் சாதனையாக குறிப்பிடலாம்.

**2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உப பிரிவால் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகள்**

| # | செயற்பாடுகள் |
|---|---|
| 01. | புதிய பிரதமர் மற்றும் பிரதமரின் செயலாளர் நியமனங்கள் பற்றிய தகவல்களுடன் பிரதமர் அலுவலகத்தின் அதிகாரப்பூர்வ இணையத்தளத்தை இற்றைப்படுத்துதல். |
| 02. | அரசாங்கத்தின் செலவினங்களை குறைக்கும் பொருட்டு அரச துறை வீட்டிலிருந்து வேலை செய்யும் (Work From Home) எண்ணக்கருவை பின்பற்றி ஒரு சாத்தியவள ஆய்வை மேற்கொள்ளும் பொருட்டு ஒரு முன்னோடிக் கருத்திட்டமாக பிரதமர் அலுவலகத்தின் மக்கள் தொடர்புப் பிரிவின் பணிகளை  வீட்டிலிருந்து மேற்கொள்ள தேவையான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வகதிகளை செய்து கொடுத்து வழிகாட்டல்களை தயாரித்தல். |
| 03. | மேலே உள்ள இலக்கம் 02 இன் பெறுபேறுகளின் அடிப்படையில், பிரதமர் அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் ஆவண முகாமைத்துவ முறைமையை ஏனைய நிறுவனங்கள் பாவிக்கக்கூடிய வகையில் நவீனமயப்படுத்துதல். |
| 04. | தற்பொழுது தாபனப் பிரிவில் பயன்பாட்டில் உள்ள மனித வள முகாமைத்துவ முறைமையை உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட தகவல்களை சேர்ப்பதை சாத்தியமாக்கும் வகையில் தேவைகள் பகுப்பாய்வையும் மற்றும் முன்மாதிரிகளையும் உள்ளடக்கி தரவுகளை தனிப்பயனாக்கி (customize) அறிக்கைகளை தயாரிக்கும் சாத்தியத்தை ஏற்படுத்தும் வகையில் மேம்படுத்துதல். |
| 05. | தற்போது பயன்படுத்தப்படும் ஆவண முகாமைத்துவ முறைமையை (DMS) மொபைல் சாதனங்களுடன் இணக்கமாக மேம்படுத்தி, அதன் புதிய அம்சங்களைப் பயன்படுத்துவது பற்றி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளித்தல். |
| 06. | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான மேம்பாடு மற்றும் பிரதமர் அலுவலகத்தின் அதிகாரப்பூர்வ இணையத்தளத்தை நவீனப்படுத்தி இற்றைப்படுத்துதல். |

| # | செயற்பாடுகள் |
| --- | --- |
| 07. | பிரதமர் அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் தகவல் முறைமைகளுக்காக நிறுவப்பட்ட பேரிடர் மீட்பு தளத்தின் மேலும் அபிவிருத்தி செய்துபராமரிப்பு பணிகளை மேற்கொள்ளல். |
| 08. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப கொள்முதல்களுக்கான தொழில்நுட்ப மதிப்பீடுகளை மேற்கொண்டு சிபாரிசுகளை முன்வைத்தல். |
| 09. | கணனிகள், சேவை கணனிகள், கணனி பாகங்கள் மற்றும் கணனி நெட்வொர்க்குகள் என்பவற்றின் பொதுவான பராமரிப்புகளை மேற்கொள்ளல், மின்னஞ்சல் கணக்குகளை வழங்குதல் மற்றும் அவற்றை நிர்வகித்தல்,அனுமதிப்பத்திர மற்றும் பராமரிப்பு சேவை ஒப்பந்தங்களை புதுப்பித்த நிலையில் வைத்திருத்தல், ஒன்லைன் கூட்டங்களை நடத்துதல் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவின் பொதுவான அலுவலக பணிகளுக்கு தொழில்நுட்ப உதவியை வழங்குதல். |
| 10. | பிரிவுகளுக்கான பொருட்கள் கோரிக்கைகளை ஒன்லைனில் சமர்ப்பிப்பதை முன்னுரிமையாகக் கருத்தில் கொண்டு, களஞ்சிய செயற்பாடுகளை திறமையாகவும் பயனுள்ளதாகவும் மாற்ற மேம்படுத்தப்பட்ட e-Stores முறைமையை நிறுவுதல் மற்றும் அதைப் பயன்படுத்த உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளித்தல். |
| 11. | பிரதமர் அலுவலகத்தின் சிறிமாவோதய வளாகம் மற்றும் அலரி மாளிகை வளாகம் ஆகிய வளாகங்களில் சைபர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக காலாவதியான ஃபயர்வோலுக்கு புதிய ஃபயர்வோல்களை நிறுவுதல். |
| 12. | ஒன்லைன் பிரிவுகளில் லீவு விவரங்களை உள்ளீர்ப்பதற்கானHRM மென்பாகமுறைமையையும், சட்ட ஆவணங்களை உள்ளீர்ப்பதற்கான CDFup மென்பாகமுறைமையையும் மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல். |
| 13. | தயாரிக்கப்பட்டு வரும் பிரதமர் அலுவலகத்தின் மூலோபாயத் திட்டத்தில், பிரதமர் அலுவலகத்தை டிஜிட்டல் மயமாக்குவது தொடர்பான திட்டங்களைத் தயாரிப்பதற்குபங்களித்தல். |

| # | செயற்பாடுகள் |
|---|---|
| 14. | பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தின் e-BMD, e-Pop, e-Land, e-Title போன்றவற்றில் பிரஜைகளை மையமாகக் கொண்ட தரவு முறைமைகளில் உள்ள தொழில்நுட்ப பிரச்சினைகளை தீர்க்க தேவையான ஆலோசனைகளை வழங்குதல். |
| 15. | ஜனாதிபதி அலுவலகத்தையும் மற்றும் பாராளுமன்றத்தின்சபை முதல்வரின் அலுவலகத்தையும் டிஜிட்டல்மயமாக்குவதற்குஉதவுதல். |

## 3.3 வழங்கல் சேவைகள் மற்றும் பராமரிப்பு சேவை விடயங்கள்

**3.3.1. 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் சேவைகள் மற்றும் பராமரிப்பு விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள கருமபணிகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

**வழங்கல் சேவைகள்**

- தொகுதிகளாக உள்ள வாகனங்களின் பராமரிப்பை இற்றைப்படுத்தி பேணுதல்.
- வாகன பழுதுபார்ப்பு தேவைப்பட்டால் உள்நாட்டு முகவர்கள் செய்யும் பழுதுபார்ப்புகளுக்கு தேவையான நடவடிக்கையை எடுத்தல் மற்றும் வெளிவாரி முகவர்கள் செய்யும் அத்தகைய பழுதுபார்ப்புகளை பெறும் நடவடிக்கைகளுக்காக கணக்குப் பிரிவுக்கு பரிந்துரைத்தல்.
- வாகனங்களின் பதிவு சான்றிதழ்களையும் மற்றும் காப்பீட்டு அணவல் பத்திரங்களையும் உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ளல்.
- பொருத்தமான சந்தர்ப்பங்களில் பதவியணி ஊழியர்களுக்கும் மற்றும் சாரதிகளுக்கும் பயிற்சி வேலைரயங்குகளை ஏற்பாடு செய்தல்.
- பிரதமர் அலுவலகத்தின் ஊடகப் பிரிவினதும் பிற பிரிவுகளினதும் உத்தியோகத்தர்களுக்கு தேவையான வசதிகளை பெற்றுக் கொடுத்தல்.
- சாரதிகளின் தகவல் அடங்கிய விரிவான ஒரு தரவுத்தளத்தை பேணுதல்.

**பராமரிப்பு அலகு**

- சிறிமதிபாய வளாகத்தின் நுழையும் மற்றும் வெளியேறும் வாயில்களைப் புதுப்பித்தல்.

- உத்தியோகபூர்வ இல்லத்திலும் மற்றும் தோட்டங்களில் உள்ள பழங்காலப் பொருட்களையும் மற்றும் தொல்பொருட்களையும் பாதுகாக்க பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.
- தேவைப்படும்போது மின்பிறப்பாக்கி இயந்திரங்களை வழங்குதல்.
- பூங்காவில் உள்ள மதிப்புமிக்க மற்றும் நினைவு தாவரங்களைப் பாதுகாத்தல்.
- வளாகத்திற்கு வருகை தரும் பாடசாலை மாணவர்களுக்கு மருந்துகளை அல்லது மதிப்புமிக்க பரிசுகளை வழங்க ஏற்பாடு செய்தல்.
- பிரதமர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இல்ல வளாகத்தில் தோட்டலங்கார விடயங்களை திட்டமிடுதல், தாவர இனங்களை நடுதல் மற்றும் அவற்றை பராமரித்தல், தாவர பாதுகாப்பு மற்றும் தோட்டப் பராமரிப்பு முதலிய பணிகள் இந்தப் பிரிவால் மேற்கொள்ளப்படுகின்றன.

# 04 அபிவிருத்திப் பிரிவு

இந்தப் பிரிவு தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு தேவையான உதவியை வழங்குவதன் மூலமும்மற்றும்அரச கொள்கைகளின் அடிப்படையில், பிரதமர் வழங்குகின்ற அறிவுறுத்தல்களுக்கு அமையஅரச கொள்கைகளை ஒருங்கிணைத்து செயற்படுத்துவதை எளிதாக்குவதன் மூலமும் நாட்டின் சமூகப் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு பங்களிக்கின்றது.

## 4.1 சர்வதேச உறவு விவகாரங்கள்

### 4.1.1 2024.10.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் மேற்கொள்ளப்பட்டுள்ள சர்வதேச உறவு விவகாரங்கள்

❖ **வெளிநாடுகளில் உள்ள தூதுவர்களுடனும் மற்றும் உயர் ஸ்தானிகர்களுடனும் இடம்பெற்ற சந்திப்புகள்**

இருதரப்பு மற்றும் பலதரப்பு இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தவும், அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் என்பவற்றை விரிவுபடுத்தவும், நாடுகளுக்கு இடையிலான கலாச்சார உறவுகளை வலுப்படுத்தவும் தேவையான தலைமைத்துவத்தை பிரதமர் அலுவலகம் வழங்குகின்றது. அதன்படி, 2024.10.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரை பின்வரும் வெளிநாட்டு தூதுவர்களுடனும் உயர் ஸ்தானிகர்களுடனும் இடம்பெற்ற இராஜதந்திர சந்திப்புகளுக்கு தேவையான ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை இந்த அபிவிருத்திப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

- ஜப்பான்
- ஐக்கிய அமெரிக்கா
- பங்காளதேஷம்
- இந்தியா
- கொரியா
- சுவீடன்
- பிரித்தானியா
- சுவிட்சர்லாந்து
- தாய்லாந்து
- மாலைதீவு
- தென் ஆபிரிக்கா
- மியன்மார்
- கியூபா
- அவுஸ்திரேலியா
- நியூசிலாந்து

- கனடா
- பாகிஸ்தான்
- நெதர்லாந்து
- எகிப்து
- மலேசியா
- மோல்ட்டா
- பிரான்ஸ்
- அவுஸ்திரியா
- வத்தீக்கான்
- ஈரான்
- நோர்வே
- துருக்கி
- இத்தாலி
- ஜப்பான்
- ஐக்கிய அரபு இராச்சியம்
- ருமேனியா

❖ **இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்புகள்**

2024.10.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரை இலங்கைக்கு வருகை தந்த பின்வரும் வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கும் கௌரவ பிரதமருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்புகளுக்குத் தேவையான ஒருங்கிணைப்பை இந்தப் பிரிவு செய்தது.

- இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு வருகை தந்தபோது கௌரவ பிரதமருடன் இடம்பெற்ற சந்திப்பு
- ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதருடன் இடம்பெற்ற சந்திப்பு
- அமெரிக்காவிலிருந்து வருகை தரும் பிரதிநிதிகளுடன்(Visiting delegation from the United States) இடம்பெற்ற சந்திப்பு
- பிரான்சின் ஐரோப்பிய மற்றும் வெளியுறவு அமைச்சின் பொது செயலாளருடன் இடம்பெற்ற இராஜதந்திர சந்திப்புகளுக்கான ஏற்பாடுகள்ஒருங்கிணைப்பட்டன.

❖ **ஐக்கிய நாடுகள் சபையின் இணைப்பு நிறுவனங்களுக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்புகள்**

ஐக்கிய நாடுகள் சபையின் இணைப்பு நிறுவனங்களுடன் இடம்பெற்ற இராஜதந்திர சந்திப்புகளுக்கு தேவையான ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க, கீழே பட்டியல்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களுடன் இடம்பெற்ற சந்திப்பு கூட்டங்களுக்கும்

கலந்துரையாடல்களுக்கும் தேவையான ஒருங்கிணைப்பும் மற்றும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

- ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு(UNFAO)
- ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம்(UNFPA)
- ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சிறுவர்களின் அவசர நிதியம்(UNICEF)
- அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அலுவலகம் (UNHCR)
- ஐக்கிய நாடுகள் (UN) பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற இராஜதந்திர சந்திப்புகள்

❖ **பல்வேறு சர்வதேச அமைப்புகளுடன் இடம்பெற்ற சந்திப்புகள்**

சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற இராஜதந்திர சந்திப்புகளுக்கு தேவையான ஒருங்கிணைப்பை சர்வதேச உறவுகள் பிரிவு மேற்கொண்டது. அதன்படி, பல சர்வதேச அமைப்புகளுடன் சந்திப்புகள் இடம்பெற்றன. அந்த சந்திப்புகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

- சர்வதேச நாணய நிதியம் (IMF),
- ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB),
- பாகிஸ்தானிய வணிகக் குழு
- சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO), சர்வதேச இடம்பெயர்வு அமைப்பு (IOM)
- சிங்கப்பூர் ஊடக சங்கம், கொரியா சர்வதேச கூட்டுறவு நிறுவனம் (KOICA)
- ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகவராண்மை (JICA)
- சீன மக்கள் குடியரசின் மத்திய குழுவின் சர்வதேச திணைக்களம் (சீனா - IDCPC)
- உலக வங்கி (உலக வங்கி) சர்வதேச IDEA -ஜனநாயக மற்றும் தேர்தல் உதவிற்கான சர்வதேச நிறுவனம் [World Bank (World Bank), International IDEA -International Institute for Democracy and Electoral Assistance]

- GGGI -பூகோள பசுமை வளர்ச்சி நிறுவகம், பில் என்ட் மெலின்டா கேட்ஸ் பவுன்டேஷன் [GGGI-Global Green Growth Institute, Bill & Melinda Gates Foundation]
- அகில சீன மகளிர் ஒன்றியம் மற்றும் சீன மக்கள் குடியரசினது அரசியல் ஆலோசனை ஒன்றியத்தின் தேசிய குழு (National Committee of the Chinese People's Political Consultative Conference - CPPCC)

**❖ நத்தார் பண்டிகையை முன்னிட்டு மின்-வாழ்த்து அட்டைகளை அனுப்புதல்**

இலங்கையில் வசிக்கும் வெளிநாட்டு தூதுவர்களுக்கும் மற்றும் உயர் ஸ்தானிகர்களுக்கும் பிரதமர் சார்பாக நத்தார் பண்டிகை மற்றும் 2025 புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்க மின்-வாழ்த்து அட்டைகளை அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

**❖ கௌரவ பிரதமரின் நியமனத்திற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு பதில் கடிதங்களை அனுப்புதல்**

இலங்கையின் 16-வது பிரதமராக பதவியேற்ற இலங்கையின் மூன்றாவது பெண் பிரதமர் கௌரவ கலாநிதி ஹரிணி அமரசூரிய அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து வெளிநாட்டு ஜனாதிபதிகள், உப ஜனாதிபதிகள், பிரதமர்கள், அரச தலைவர்கள், தூதுவர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரிடமிருந்து கௌரவ பிரதமருக்கு வாழ்த்து செய்திகள் வந்துள்ளன. அந்த வாழ்த்து செய்திகளுக்கு பிரதமர் சார்பாக பதில் கடிதங்கள் அனுப்பப்பட்டன. அதன்படி, 2024.10.01ஆம் திகதிமுதல் 2024.12.31ஆம் திகதிவரை பின்வரும் வெளிநாட்டு பிரமுகர்களுக்கு பதில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

- ஸ்பெயின் ஜனாதிபதி
- சைப்ரஸ் குடியரசின் ஜனாதிபதி
- சிங்கப்பூர் பிரதமர்
- பாகிஸ்தான் பிரதமர்
- பூட்டான் நாட்டு பிரதமர்
- பஹ்ரான் பிரதமர்
- சைப்ரஸ் குடியரசின் ஜனாதிபதி
- ஈரானின் முதல் உப ஜனாதிபதி
- ஆர்மீனியாவின் பிரதமர்
- ஆர்மீனியா குடியரசின் பிரதமர்
- நேபாள பிரதமர்
- செக் குடியரசின் பிரதமர்

- நெதர்லாந்து பிரதமர்
- பிரான்ஸ் பிரதமர்
- கம்போடியா இராச்சியத்தின் பிரதமர்
- வடக்கு மாசிடோனியாவின் பிரதமர்
- பெலாரஸ் குடியரசின் பிரதமர்
- மியான்மர் பிரதமர்
- மொரிஷியஸ் குடியரசின் பிரதமர்
- ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர்
- வியட்னாம் தூதுவர்
- அன்டோரா நாட்டு தலைவர்
- BIMSTEC இன் பொது செயலாளர்
- சார்க் அமைப்பின் பொது செயலாளர்
- ஹங்கேரி குடியரசின் பிரதமர்
- ஸ்லோவேனியா குடியரசின் பிரதமர்
- கம்போடியா இராச்சியத்தின் பிரதமர்
- கியூபா நாட்டு பிரதமர்
- கொரிய குடியரசின் பிரதமர்
- செர்பியா குடியரசின் பிரதமர்
- ஜப்பான் தூதுவர்
- பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர்
- டியூனிசியா குடியரசு
- இலங்கை முஸ்லிம் அமைப்பு சபையின் தலைவர் - இங்கிலாந்து
- ஐக்கிய நாடுகளின் மனித குடியேற்றங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் (UN-HABITAT) பொது செயலாளர்
- ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதிய (UNFPA) நிறைவேற்று பணிப்பாளர்
- ஆசிய பசுபிக் பிராந்தியங்களுக்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார சமூக ஆணைக்குழுவின் (ESCAP) நிறைவேற்று செயலாளர்

### 4.1.2 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.09.30 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சர்வதேச உறவு விவகாரங்கள்

❖ **பல பரிமாண வறுமை சுட்டியை (Multidimensional Poverty Index- MPI) ஒரு கொள்கை கருவியாகப் பயன்படுத்துதல்**

உலகெங்கிலும் சுமார் 100 நாடுகளில்ஏற்கனவே பயன்படுத்தப்படும் பல பரிமாண வறுமை சுட்டியை அதாவது (MPI) இந்த நாட்டின் வறுமையை ஒழிப்பதில் ஒரு கொள்கை சாதனமாக பயன்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பாகஅரச உத்தியோகத்தர்களுக்கு விழிப்பூட்டும் நோக்கத்துடன்

அமைச்சரவை அந்தஸ்துள்ள அனைத்துஅமைச்சுக்களினதும் மற்றும் அரச நிறுவனங்களினதும்உத்தியோகத்தர்களை இணைத்து ஒரு வேலையரங்கு2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம்18 ஆம் திகதி கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில்நடத்தப்பட்டது. அதன்படி, MPI சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு நிரல்படுத்திய குறித்த இலக்குகளை அடையாளப்படுத்தும் முகமாக MPI சுட்டிகளை பயன்படுத்துவதற்கான கருத்திட்டங்களை இனங்காணுவதற்கும், நோக்கங்களை கோடிட்டுக் காட்டுவதற்கும், குறித்த இலக்குகளை அடைவதற்கு வளங்களை கோடிட்டுக் காட்டுவதற்கும் அனைத்து அமைச்சுக்களிடமிருந்தும் அரச நிறுவனங்களிடமிருந்தும் கருத்திட்டத்துடன் இடைணந்த அடிப்படையான விவரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

- **கௌரவ பிரதமரின் இராஜதந்திர சந்திப்புகள்**

இருதரப்பு மற்றும் பலதரப்பு உறவுகள், அபிவிருத்திற்கான கூட்டுறவு மற்றும் நாடுகளுக்கு இடையிலான முதலீட்டு வாய்ப்புகள் என்பனபற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் நோக்கத்துடன், கௌரவ பிரதமர் கொரியா, மியான்மார், தாய்லாந்து, ஜப்பான், வியட்னாம், மாலைதீவு, மொரிஷியஸ், கிரேக்கம், ரஷ்யா, இந்தியா, நியூசிலாந்து, ஈரான், ருமேனியா, சுவிட்சர்லாந்து, பாகிஸ்தான், பங்களாதேஷம், ஜேர்மனி, சீனா, பாலஸ்தீனம், நெதர்லாந்து ஆகிய நாடுகளுடனும் அத்துடன் ஐரோப்பிய ஒன்றியம் (EU) போன்ற அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும்,சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம் (IWMI), ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியங்களுக்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு (UNESCAP), உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO), சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO), ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் (UNFPA), சர்வதேச நாணய நிதியம் (IMF), இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசனை சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு பற்றிய அமைப்பு போன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனும்இடம்பெற்ற இராஜதந்திர சந்திப்புகளுக்கு தேவையான ஒருங்கிணைப்பும் அதே போல் கௌரவ பிரதமர் இலங்கையைப் பிரதிநிதிப்படுத்துவதற்காக புதிதாக நியமித்த தூதுவர்களுடனும் மற்றும் உயர் ஸ்தானிகர்களுடனும் இடம்பெற்ற கௌரவ பிரதமரின் சந்திப்புகளுக்கு தேவையான ஒருங்கிணைப்பும் இந்தப் பிரிவினால் செய்யப்பட்டது.

- **சீன உத்தியோகபூர்வ விஜயம் மற்றும் ஆசியாவுக்கான போவா பொருளாதார மன்றத்தில் (Boao Forum for Asia) கலந்துகொள்ளல்**

  சீன அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், பிரதமர் சீனாவிற்கு ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை (2024.03.25 ஆம் திகதி முதல் 2024.03.30 ஆம் திகதி வரை) மேற்கொண்டார். இதன் போது சீன அதிபர் ஜி-ஜின்பிங்குடன் சீன வெளியுறவுத்துறை அமைச்சர் உள்ளிட்ட பல அமைச்சர்களின் பங்குபற்றலில் இருதரப்பு கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

- **கொரியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம்**

  கொரியாவின் கியோங்சாங்புக்-டோ மாகாண ஆளுநர் விடுத்த அழைப்பின் பேரில், பிரதமர் கொரியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் (2024.04.02 ஆம் திகதி முதல் 2024.04.04 ஆம் திகதி வரை) மேற்கொண்டிருந்தார்.

- **பௌத்தலோக மாவத்தையில் உள்ள தர்மாயதன விஹாரையில் பிரதிஷ்டை செய்வதற்காக வெளிநாடுகளிலிருந்து புத்தர் சிலைகள் கொண்டுவரப்பட்டமை**

பிரதமர் விடுத்த வேண்டுகோளின் பேரில், இந்தியா, சீனா, பூட்டான், லாவோஸ், வியட்னாம், மியான்மர், ஜப்பான், கொரியா, இந்தோனேசியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்து புத்தர் சிலைகளை பௌத்தலோக்க மாவத்தையில் உள்ள தர்மயாதனத்திற்கு எடுத்து வருவதற்கு அந்த நாடுகளின் தூதரகங்களுடனும் உயர் ஸ்தானிகர் அலுவலகங்களுடனும் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டது.

## 4.2 மூலோபாய விடயங்கள்

### 4.2.1. 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் மேற்கொள்ளப்பட்டுள்ள மூலோபாய விடயங்கள்

- **அரசாங்கத்திற்கு சொந்தமான வணிக சாரா நிறுவனங்களை மீளாய்வு செய்தல்**

  அரசாங்கத்திற்கு சொந்தமான வணிக சாராத நிறுவனங்கள் அவ்வப்போது ஒருசில குறித்த நோக்கங்களுக்காக நிறுவப்பட்டுள்ளன. மேலும் அந்த நிறுவனங்களின் தற்போதைய பங்கை மீளாய்வு செய்ய வேண்டியதன் அவசியம் தற்போதைய சூழலில் செல்லுபடியானதா அல்லது இல்லையா என்பது போன்ற பல காரணங்கள் நிமித்தம் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, 2024 ஆம் ஆண்டில் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததையடுத்து

ஒவ்வொரு அமைச்சின் கீழ் இயங்குகின்ற வணிகமயமாகாத நிறுவனங்களை சரியாக இனங்கண்டு அந்த நிறுவனங்களை மறுசீரமைத்தல், ஒன்றிணைத்தல் அல்லது பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் என்பன தொடர்பாக ஆராயும் பொருட்டு 2024.12.13 ஆம் திகதி கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு இணங்க பிரதமரின் செயலாளரினது தலைமையிலான ஒரு குழு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டது. அதற்கமைய, குறித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இனங்காணப்பட்டுள்ள 166 நிறுவனங்கள் தொடர்பாக தகவுகளை சேகரிப்பது முதல் இறுதி அறிக்கையை தயாரிப்பது தொடர்பான அனைத்து விடயங்களும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- **டவர் மண்டப தியேட்டர் பவுண்டேஷனுக்கு சொந்தமான சவ்சிரிபாய கட்டிடம் தொடர்பாக எழுந்துள்ள சிக்கல் நிலைமைக்கு நியாயமான மற்றும் பொருத்தமான தீர்வை எட்டுதல்**

2016 ஆம் ஆண்டு முதல் குத்தகை ஒப்பந்தத்தை புதுப்பிக்காமல், நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) தலைமை அலுவலகம் தற்போது அமைந்துள்ள சவ்சிரிபாய கட்டிடத்தை CIDA சபை சட்டப்பூர்வமாக ஆக்கிரமித்து வருவதால் எழுந்துள்ள சிக்கலான சூழ்நிலை பற்றி டவர் மண்டப தியேட்டர் பவுண்டேஷன் கலந்துரையாடியுள்ளது. மேலும் நியாயமான பொருத்தமான தீர்வும் எட்டப்பட்டுள்ளது. இந்த இலக்கை அடையும் நோக்கில், பிரதமர் மற்றும் பிரதமரின் செயலாளரின் தலைமையில் பிரதமர் அலுவலகத்தில் பல கூட்டங்கள் நடத்தப்பட்டுஉரியதரப்புகளுக்கு சிபாரிசுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

- **தகவல் தொழில்நுட்ப முறைமைகளை பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவதன் மூலம் அரசாங்க வருமான சேகரிப்பை அதிகரித்தல்**

அரசாங்கத்தின் வருமானத்தை ஈட்டுவதற்கு முக்கியமான 13 நிறுவனங்களை முதல் சுற்றில் தேர்ந்தெடுத்து தொழில்நுட்ப முறைமைகளை ஒன்றிணைப்பதன் மூலமாக அரசாங்கத்தின் வருமான சேகரிப்பை அதிகரிக்கும் பொருட்டு நடவடிக்கை எடுப்பதை கண்காணிப்பதற்கு பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குகள் பற்றிய குழு பிரதமரின் தலைமையில் நியமித்த குழுவினால் அந்த 13 நிறுவனங்களின் தலைவர்களுடனும் அதே போல் பொதுக் கணக்ககள் பற்றிய குழுவின் பணிப்புரையின்படி நியமிக்கப்பட்டுள்ள அந்தந்த

நிறுவனங்களின் சட்ட, தொழில்நுட்ப மற்றும் நிருவாக உப குழுக்களின் அதிகாரிகளுடனும் பல கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு அந்தந்த நிறுவனங்களில் பேணப்படுகின்ற தகவல் தொழில் நுட்ப முறைமைகள் எவை, அவற்றை ஒன்றிணைக்கும் தற்போதைய நிலைமை மற்றும் அதனை பாதித்துள்ள சட்ட, தொழில்நுட்ப மற்றும் நிருவாக தடைகள் என்பவற்றை கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு நிறுவனத்திலும் காணப்படும் நிதி மற்றும் மனித வளங்கள் பற்றி ஆராய்ந்து தகவல் தொழில்நுட்ப முறைமையைத் தாபிப்பதற்கும் மற்றும் அவற்றை ஒன்றிணைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய எதிர்பார்த்த தினங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டது. அந்த செயல் திட்டம் அடங்கிய ஆரம்ப அடிப்படை அறிக்கையும் அதற்கு இணங்க அதனுடன் தொடர்புடைய ஒரு முன்னேற்ற அறிக்கையும் 2024.07.26 ஆம் திகதி பொதுக் கணக்குகள் பற்றிய குழுவுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டன. இது தொடர்பான கண்காணிப்புப் பணிகள் மேலும் இந்தத் தொழில்நுட்பக் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது பற்றி பொதுக் கணக்குகள் பற்றிய குழு 2024.12.10 ஆம் திகதி வினவியுள்ளது.

இது தவிர, பொதுக் கணக்குகள் பற்றிய குழுவின் 2023.10.19 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது கொவிட்-19 (COVID 19) காலப் பகுதியினுள் வீடுகளில் இருந்துகொண்டு வேலை செய்யும் முறையை ஒட்டுமொத்த அரச சேவைக்கும் அறிமுகப்படுத்தும் சாத்தியத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கு பிரதமர் அலுவலகத்தின் தலைமையில் பல கூட்டங்கள் நடத்தப்பட்டு வீடுகளில் இருந்துகொண்டு அலுவலக கடமைகளை செய்யும் (Work From Home - WFH) முறையை செயற்படுத்தப் பொருத்தமான ஒரு முறையியலைத் தயாரிக்கும் பொருட்டு ஒரு குழு நியமிக்கப்பட்டது. அதன் முன்னேற்றத்தை பின்னூட்டல் செய்யும் பொருட்டு 2024.03.07 ஆம் திகதி ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. மேலும், அதனை அறிமுகப்படுத்துவதாயின், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான சிபாரிசுகள் அடங்கிய குழு அறிக்கை பொதுக் கணக்குகள் பற்றிய குழுவுக்கு 2024.06.14 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டது. இது தொடர்பான கண்காணிப்பு விடயங்கள் மேலும் இந்த தொழில்நுட்பக் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது பற்றி பொதுக் கணக்குகள் பற்றிய குழுவிடமிருந்து 2024.12.10 ஆம் திகதி வினவப்பட்டுள்ளது.

- **தேசிய செயற்பாட்டு கருமபீடம் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்**

வரவுசெலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளவாறு, செயற்படுத்தப்படும் அனைத்து அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிலும் எழுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் பொருட்டு அப்போதிருந்த நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் மேற்பார்வை பிரிவின் கீழ் பிரதமரின் செயலாளரினது தலைமையில், **"தேசிய செயற்பாட்டு நிலையம்"** தாபிக்கப்பட்டது. குறித்த ஒருங்கிணைப்பு விடயங்கள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. இந்த செயற்பாட்டு கருமபீடம் 2023 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 06 ஆம் ஆரம்பிக்கப்பட்டது. இன்று வரை 52 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

- **"தேசிய நீர்வளக் கொள்கையை" செயற்படுத்துவது தொடர்பான ஆரம்பப் பணிகள்**

இலங்கையில் ஒரு பொது நீர் பகிர்ந்தளிப்பு முகாமைத்துவ அணுகுமுறையை செயற்படுத்தல் தொடர்பான அமப/23/1255/602/006-1 ஆம் இலக்க 2023.07.10 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தேசிய நீர் வளங்கள் கொள்கையை செயற்படுத்தும் பொருட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்தக் கொள்கை வரையப்பட்டபோது இதற்கான ஒருங்கிணைப்பு விடயங்கள் பிரதமர் அலுவலகத்தின் அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் நிமித்தம் நிதி உதவியும் மற்றும் தொழில்நுட்ப உதவியும் ஒன்றிணைந்த நீர்நிலை மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவக் கருத்திட்டத்தினாலும் (Integrated Watershed & Water Resources Management Project) (IWWRMP) மற்றும் மகாவலி நீர் பாதுகாப்பு மற்றும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினாலும் (Mahaweli Water Security and Investment Programme (MWSIP) வழங்கப்பட்டுள்ளன.

எனினும் வேறு பிற பொருத்தமான கொள்கையைத் தயாரிக்கும் பணி பொதுமக்களின் கருத்துக்கள் பெறப்படாமல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தெரிய வந்ததால் அது தொடர்பாக மேல் நடவடிக்கையை எடுக்கும் பொருட்டு அறிவுரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சீதாவாக்க பகுதியில் ஒரு நூதனசாலையை தாபித்தல்**

2024 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில், அப்போதைய புத்தசாசன, மத மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சுடன் இணைந்திருந்த மத்திய கலாச்சார நிதியத்தின் மூலம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சீதாவாக்க பகுதியில் ஒரு நூதனசாலையை தாபிக்க தேவையான கட்டிடத்தை வழங்கும் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பிரதமர் அலுவலகத்தின் முழுமையான மேற்பார்வையில் செயற்படுத்தப்பட்டது. அதன்படி, இந்த நூதனசாலையை அமைப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்த கட்டிடத்தை புதுப்பித்தல், தோட்டங்களை இயற்கை காட்சிகளினால் அழகுபடுத்துதல், அணுகுவீதித் திட்டங்களையும் மற்றும் வடிகாலமைப்புத் திட்டங்களை தயாரித்தல், காட்சிப்படுத்துவதற்கான நூதனப்பொருட்களை இனங்காணுதல், ஆவணப்படத் திட்டத்தைத் தயாரித்தல், பாடசாலை மாணவர்களுக்கு கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடுதல், வாகனம் நிறுத்துவதற்கான வசதிகளையும் துப்புரவேற்பாட்டு வசதிகளையும் வழங்குதல் போன்ற பணிகள் உரிய அக்கறையுடைய தரப்பு நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டன. சீதாவாக்க நூதனசாலை 2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22 ஆம் திகதி மக்கள் பாவனைக்காக ஒப்படைக்கப்பட்டது.

- **சம்மங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் வேல் பவணி விழா**

இந்து மக்கள் மிகவும் மதிக்கும் கதிர்காமக் கடவுள் மீதான நம்பிக்கையை முதன்மையாகக் கொண்டு நிருவகிக்கப்படும் சம்மங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் தாபிக்கப்பட்டு தற்பொழுது 170 ஆண்டுகள் கழிந்துள்ளன. இவ்வாறு, சுமார் 170 ஆண்டுகால வரலாற்றையுடைய இந்த கோயிலில், 150 ஆண்டுகளாக வேல் பவணி விழா நடத்தப்பட்டு வருகின்றது. இந்த கோயில் தாபிக்கப்பட்டு 170-வது ஆண்டு பூர்த்தியாகுவதால், அதனை முன்னிட்டு வேல் பவணி விழா 2024.07.19 ஆம் திகதி கதிர்காம தெய்வத்தை நினைவுகூர்ந்து அலரி மாளிகை வளாகத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

அதன்படி, எதிர்கால சந்ததியினருக்கு மத நல்லிணக்கத்தை போதிப்பதற்கு கொழும்பு 04, புனித மரியாள் தமிழ் மகா வித்தியாலய பாடசாலை மாணவர்களின் பங்கேற்புடனும், இந்து சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் திணைக்களத்தின் அதிகாரிகளின் பங்கேற்புடனும் வேல் பவணி விழா வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

### 4.2.2 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.09.30 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் நடத்தப்பட்டுள்ள கூட்டங்கள் பற்றிய விபரங்கள்

- காடழிப்பு, சட்டவிரோத மணல் அகழ்வு அகியவற்றை தடுப்பதற்கும் மற்றும் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும் நியமிக்கப்பட்ட குழு தொடர்பான கலந்துரையாடல்கள்
- இலங்கையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களின் மருத்துவ பட்டப்படிப்புகளை அங்கீகரிப்பதற்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்படும் நியமங்களும் அளவுகோல்களும் அடங்கிய ஒரு தேசிய கொள்கையை வரைவது பற்றிய கலந்துரையாடல்
- ஓய்வுபெற்ற தலைமை நீதிபதிகளினதும் பிற உயர் நீதிமன்ற நீதிபதிகளினதும் பரிவர்த்தனை செய்யப்பட்ட பணிக்கொடையை (ஓய்வூதிய பணிக்கொடை) செலுத்துதல் மற்றும் அறிவீடு பற்றிய கலந்துரையாடல்
- நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான தேசிய வழிகாட்டல் குழு கலந்துரையாடல்
- பெண்கள் மத்தியில் நிதிய மற்றும் டிஜிட்டல் கல்வியறிவை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் பற்றிய கலந்துரையாடல்
- தகவல் தொழில்நுட்ப முறைமைகளை திறம்பட பயன்படுத்துவதன் மூலம் அரச வருமான சேகரிப்பை அதிகரிப்பது பற்றிய கலந்துரையாடல்
- 2024 ஆம் ஆண்டு வெசாக் பண்டிகையைக் கொண்டாடுவது பற்றிய கலந்துரையாடல்
- தேசிய நாமல் உயனவின் 33-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஊடக நிறுவனங்களின் சேவையை மதிப்பது பற்றிய கலந்துரையாடல்
- அமைச்சரவை அலுவலக மீளாய்வு மற்றும் சுகாதாரப் பாதுகாப்புப் பொருட்கள் பெறுகை ஆகியவற்றிற்கான ஆலோசனை சேவைகளைப் பெறுவது பற்றிய கலந்துரையாடல்
- 2030 ஆம் ஆண்டிற்கான இலங்கைக்குரிய தேசிய டிஜிட்டல் பொருளாதார மூலோபாயம் பற்றிய கலந்துரையாடல்
- யுன்னான் விவசாயப் பல்கலைக்கழகம் மற்றும் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையே செய்துகொள்ளப்படவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றிய கலந்துரையாடல்
- இலங்கையில் தற்போதுள்ள தெரு விளக்குகளுக்கு பதிலாக சக்தி வினைத்திறன் வாய்ந்த LED தெரு விளக்குகளை நிறுவும் கருத்திட்டம் பற்றிய கலந்துரையாடல்
- பரிஸ் ஒப்பந்தத்தின் 6-வது பிரிவின் ஏற்பாடுகளை இலங்கையில் செயற்படுத்துவது பற்றிய கலந்துரையாடல்
- நாட்டின் வடக்கு வறண்ட வலயம் காலநிலை மாற்றங்களுக்கு மத்தியில் எதிர்கொள்ளும் எதிர்கால சவால்களுக்கு தீர்வாக ஒரு துரித நீர்ப்பாசன

அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்துவது பற்றிய கலந்துரையாடல் - (கீழ் மல்வத்து ஓயா அபிவிருத்தி கருத்திட்டம்)

- சிட்ரா சமூக புத்தாக்க ஆய்வக கூட்டம் பற்றிய கலந்துரையாடல்
- இலங்கையின் பழங்குடி மக்களின் பாரம்பரிய உரிமைகள் தொடர்பான புதிய சட்ட கட்டமைப்பை செயற்படுத்துவதில் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கான கூட்டம்
- வ/ப ஜெஜியாங் யின்யாங் டெக்னாலஜி நிறுவனத்தின் (Zhejiang Yinyang Technology Co. Ltd) மூல முதலீட்டு வாய்ப்புகள் பற்றிய இடம்பெற்ற கலந்துரையாடல்
- விவசாயத் துறையின் அபிவிருத்திற்கான புதிய கருத்திட்டத்தை தயாரிப்பது பற்றிய விஷேட கூட்டம்
- திறன்கள் அபிவிருத்தி முறைமைகள் பரிவர்த்தனை நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஆலோசனை / தூரநோக்கு பணி பற்றிய இறுதிக் கூட்டம்
- விவசாயப் பெறுமான சங்கிலி நிதி மற்றும் வணிகமயமாக்கல் துறை அபிவிருத்தி கருத்திட்டம் பற்றி கலந்துரையாடுவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இடம்பெற்ற சந்திப்பு
- தேசிய கூட்டுறவு சங்கத்தையும் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களையும் மறுசீரமைப்பது தொடர்பான அமைச்சரவை உட்குழு பற்றிய கலந்துரையாடல்
- சீதாவாக்க பிரதேச அபிவிருத்தித் திட்டம் பற்றிய கலந்துரையாடல்

- 2024 ஆம் ஆண்டு பன்முக வரவுசெலவுத்திட்டத்தை செயற்படுத்துவது பற்றிய விழிப்புணர்வு கலந்துரையாடல் (மேல் மாகாணம், வடமேல் மாகாணம், சபரகமுவ மாகாணம், மத்திய மாகாணம், தென்மாகாணம், வட-மத்திய மாகாணம், ஊவா மாகாணம்)
- அஸ்வெசும உதவித்திட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் இற்றைப்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல்
- "ஒரே நிரல் - ஒரே பாதை" முன்முயற்சியின் கீழ் சீன மற்றும் இலங்கை தொழில்முயற்சிகள் தொடர்பான கூட்டுறவு வாய்ப்புகளை விரிவுபடுத்துவது பற்றிய கலந்துரையாடல்
- சீனாவில் உள்ள சோங்கிங் சர்வதேச கோல்ஃப் கிளப்பின் (Chongqing International Golf Club) பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்
- இலங்கை மலையக தமிழ் சமூகத்தை இலங்கை சமூகத்துடன் முழுமையாக ஒருங்கிணைக்க தொடர் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்
- அரச நிறுவனங்களில் உள்ள மேலதிக ஊழியர்களுக்கு தன்னார்வ ஓய்வூதியத் திட்டத்தைத் தயாரிப்பது பற்றிய கலந்துரையாடல்
- அரச துறையிலுள்ள நிறைவேற்று அதிகாரிகளை பாதிக்கும் தொழில் பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல்

- நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோரின் திறன்கள் மேம்பாடு பற்றிய கலந்துரையாடல்
- மேல் மாகாண மாநகர தலைமைத் திட்டம் - 2048 ஐ செயற்படுத்துவது பற்றிய கண்காணிப்பு, நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் வழிகாட்டல் ஆகியவற்றுக்கான அமைச்சரவை உட்குழு பற்றிய கலந்துரையாடல்
- இலங்கையில் முதலீடு செய்யும் வகையில் தொழில்நுட்ப நிறுவனங்களை ஊக்குவிப்பது பற்றிய கலந்துரையாடல்
- வயம்ப பல்கலைக்கழகம், ருஹுணு பல்கலைக்கழகம், சீனாவின் யுன்னான் விவசாயப் பல்கலைக்கழகம் (Yunnan Agriculture University, China) ஆகிய பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவது பற்றிய கலந்துரையாடல்
- வரலாற்று முக்கியத்துவம் கல்யாண நதி உடகுக்கேப் சீமாமாலகாவின் நிர்மாணம் பற்றிய கலந்துரையாடல்
- அவுகன ரஜமஹா விஹாரையில் எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கும் அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடல்
- தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்தி அதன் ஊடாக குறைந்த வருமானம் உடைய தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்கான கலந்துரையாடல்
- நுவரெலியா, சீதா எலிய ஆகிய இடங்களில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஸ்ரீ சீதா அம்மன் கோவிலில் மகா கும்பாபிஷேக விழாவுக்கு வசதிகளை செய்து கொடுப்பது பற்றிய கலந்துரையாடல்
- 20 இலட்சம் "உரித்து" சின்னக்கர காணி உறுதிப்பத்திரங்களை (ஃப்ரீஹோல்ட் பத்திரங்கள்) வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் பற்றிய கலந்துரையாடல்
- மாத்தளை மாவட்டத்தின் வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வில்கமுவ ஹெட்டிபொல நகரை சுற்றியுள்ள நீண்டகாலம் இருந்து வருகின்ற நிலப் பிரச்சினை பற்றிய கலந்துரையாடல்
- சீனா-இலங்கை ஒத்துழைப்பு மூலம் நாட்டின் தேசிய மின்சார முறைமையை விரிவுபடுத்தல் பற்றிய கலந்துரையாடல்
- இலங்கையின் வட கிழக்கு மாகாணங்களில் உள்ள சிறு மீனவர்களுக்கு சீனாவின் அவசர உதவியை வழங்குவது பற்றிய கலந்துரையாடல்

## 4.3 திட்டமிடல் விவகாரங்கள்

### 4.3.1. 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் திட்டமிடல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள விடயங்கள்

1. **பிரதமர் அலுவலகத்தின் வருடாந்த செயல் திட்டத்தை தயாரித்தல்**

   பிரதமர் அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவினாலும் 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்த்த கருமங்களையும் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களையும் இனங்கண்டு அவற்றின் முன்னேற்றத்தை மதிப்பிடும் பொருட்டு சுட்டிகளை உள்ளடக்கி 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு உரிய தினத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

2. **வருடாந்த செயல் திட்டத்தின் அடிப்படையில் ஆண்டுக்கான அனைத்து காலாண்டு ரீதியான பௌதீக முன்னேற்ற அறிக்கைகளையும் தயாரித்தல்**

   பிரதமர் அலுவலகத்தின் நோக்கங்களை அடையும் பொருட்டு ஒவ்வொரு பிரிவினாலும் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவது முக்கியமானதாகும். அதன்படி, 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் ஒவ்வொரு பிரிவினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றம் பற்றிய அறிக்கைகள் காலாண்டு ரீதியில் தயாரிக்கப்பட்டு குறித்த திகதிற்கு முன்னர் கணக்காய்வுப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

3. **வருடாந்த செயல் திட்டத்தின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டிற்கான ஒவ்வொரு பணியுடனும் தொடர்புடைய காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்**

   2024 ஆம் ஆண்டில் பிரதமர் அலுவலகத்தின் சகல பிரிவுகளினாலும் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்ற அறிக்கைகள் உட்பட ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாக விரிவான காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

4. **வருடாந்த செயலாற்றுகை அறிக்கையையும் மற்றும் இறுதி செயலாற்று அறிக்கையையும் தயாரித்தல்**

   2002.09.12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கையின் 2.4 ஆம் பந்தியிலுள்ள ஒழுங்குவிதிகளின்படி, 2023 ஆம் ஆண்டிற்கான பிரதமர் அலுவலகத்தின் செயலாற்றுகை பற்றிய நகல் அறிக்கை 2024 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 28 ஆம் திகதிற்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்கு

முறையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இறுதி செயலாற்றுகை பற்றிய அறிக்கை 2024.05.31 ஆம் திகதிற்கு முன்னர் பாராளுமன்றத்தில் முறையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**5. நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) அடைவது தொடர்பான பிரதமர் அலுவலக செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல்**

2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலையான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம், சகல நிறுவனங்களும் ஒவ்வொரு ஆண்டும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு தேவையாக முன்னேற்றத் திட்டங்களை சமர்ப்பிக்க வேண்டும். அதன் பிரகாரம், 2024 ஆம் ஆண்டிற்கான நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான பிரதமர் அலுவலக செயலாற்றுகை தொடர்பான அறிக்கை உரிய முறையில் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## 4.4 பாராளுமன்ற விவகாரங்கள்

### 4.4.1 2024.10.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள விடயங்கள்

❖ **அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் அமைச்சரவைக் குறிப்புகள் பற்றிய விவகாரங்கள்**

இந்தப் பிரிவு, கௌரவ பிரதமரினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் அமைச்சரவைக் குறிப்புகள் என்பவற்றை வரைந்து, அமைச்சரவை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கும் செயல்முறையை மேற்கொள்கின்றது. மேலும் தொடர்புடைய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது.

அதன்படி, 2024.10.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பல்வேறு துறைகள் தொடர்பான 04 அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் 01 அமைச்சரவைக் குறிப்பும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரிவு மேற்குறித்த அமைச்சரவை விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து, அமைச்சரவையால் எடுத்த தீர்மானங்னளில், பிரதமரின் செயலாளர் எடுக்க வேண்டிய முடிவுகளை செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க தொடர்புடைய பிரிவுகளுக்கு அறிவுறுத்துகின்றது.

❖ **அமைச்சரவைப் பத்திர சுருக்கக் குறிப்புகளை தயாரித்தல்**

அமைச்சரவைக் கூட்டங்களை நடத்து முன்னர், அமைச்சரவை அலுவலகம் வாரந்தோறும் பிரதமரின் கவனத்திற்கு அனுப்பி வைக்கின்ற அனைத்து அமைச்சரவை ஆவணங்களின் உள்ளடக்கங்களையும் சுருக்கமாகக் குறிப்பிட்டு ஒரு கோவையாக தயாரித்து பிரதமருக்கும் பிரதமரின் செயலாளருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கின்றது. அதன்படி, 2024.10.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 10 அமைச்சரவைப் பத்திரச் சுருக்கக் குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

❖ **பாராளுமன்ற அறிக்கைகளை ஆற்றுப்படுத்துதல்**

கௌரவ ஜனாதிபதி அவர்களினதும் மற்றும் கௌரவ பிரதமர் அவர்களினதும் விடயப்பரப்புகளினுள் வருகின்ற விடயங்கள் தொடர்பான அறிக்கைகளை பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களில், அதாவது குறிப்பாக வருடாந்த அறிக்கைகள், செயலாற்றுகை அறிக்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்கள் முதலியவற்றை பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் பிரதமர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப் படுகின்றன. இது வரை 09 அறிக்கைகள் பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

❖ **அமைச்சரவை பத்திரங்கள் தொடர்பான தரவுத்தள முறைமையை இற்றைப்படுத்தி பேணுதல்**

அனைத்து அமைச்சுகளும் தமது விடயப்பரப்புடன் தொடர்புடைய பணிகள் தொடர்பாக அமைச்சரவைக்கு சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்/குறிப்புகள், தொடர்புடைய அவதானிப்புகள் தீர்மானங்கள் என்பன ஸ்கேன் (Scan) செய்யப்பட்டு தரவு முறைமையினுள் உள்ளீர்க்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டு தகவுடைய அதிகாரிகளின் அனுமதி பெறப்பட்டு

அலுவலக தேவைகள் நிமித்தம் தொடர்புடைய அதிகாரிகளுக்கு பெற்றுக்கொடுக்கின்றன.

## 4.4.2. 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.09.30 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் மேற்கொள்ளப்பட்டுள்ள கரும விடயங்கள்

❖ **பாராளுமன்ற அங்கீகரிப்பதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்**

அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் வர்த்தமானியில் வெளியிட வேண்டிய சட்ட விவகாரங்கள் இறுதி செய்யப்பட்டுள்ள சட்டமூலங்களையும் மற்றும் கௌரவ பிரதமர் பாராளுமன்றத்தில் சமர்ப்பின்ன வேண்டிய திட்டங்கள் பற்றிய முன்மொழிவுகளையும் தயாரித்து பாராளுமன்ற அங்கீகாரத்தின் இந்தப் பிரிவு சமர்ப்பிக்கின்றது. அதன்படி, 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.09.30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 09 தீர்மானங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

❖ **பாராளுமன்ற பதிலளித்தல்**

- 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.09.30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், அதிமேதகு ஜனாதிபதி மற்றும் பிரதமரின் விடயப்பரப்புகள் பற்றி ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களால் பிரதமரிடம் கேட்கப்பட்ட வாய்மொழி வினாக்களுக்கான 32 நகல் பதில்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. உரிய பாராளுமன்ற வினாக்கள் தொடர்பாக உரிய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்புகள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி:
    - கௌரவ ஜனாதிபதியின் விடயப்பரப்பில் வருகின்ற அமைச்சுக்களினதும் மற்றும் ஜனாதிபதி செயலகத்தினதும் விடயங்கள் தொடர்பான வாய்மொழி வினாக்கள் **- 08**
    - கௌரவ பிரதமரின் விடயப்பரப்பில் வரும் அமைச்சுக்களினதும் மற்றும் பிரதமரின் அலுவலகத்தினதும் விடயங்கள் தொடர்பான வாய்மொழி வினாக்கள் **- 33**
- நிலையியல் கட்டளை இலக்கம் 27(2) இன் கீழ் கேட்கப்படும் ஒரு (01) வினாவுக்கு பதில்கள் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை விடயங்கள் குறித்து பாராளுமன்ற அமர்வுகளின் போது ஒவ்வொரு மாதமும் முதல் புதன்கிழமை பிரதமரிடம் கேட்கப்படும் 08 வாய்மொழி வினாக்களுக்கு பதில்கள் வழங்கப்படுகின்றன. அதன்படி, எட்டு வாய்மொழி வினாக்களுக்கு 16 பதில்கள் இரண்டு சந்தர்ப்பங்களில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், அமைச்சரவைக்கான குறிப்புகள், அவதானிப்புகள், அமைச்சரவைப் பத்திர சுருக்கக் குறிப்புகள் என்பன தொடர்பாக 2024.01.01 - 2024.09.30 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள்**

| மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் | எண்ணிக்கை |
|---|---|
| **அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்** | 20 |
| **அமைச்சரவைக்கான குறிப்புகள்** | 7 |
| **அவதானிப்புகள்** | 23 |
| **அமைச்சரவைப் பத்திர சுருக்கக் குறிப்புகள்** | 36 |
| **பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகள்** | 36 |

## 05 கணக்குகள் பிரிவு

சட்ட ரீதியில் பிரதமர் அலுவலகத்திற்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுறும் பொருட்டு சிறந்த மற்றும் பயனுள்ள நிதி முகாமைத்துவ மூலோபாயங்களை செயல்படுத்துவதும், சிறந்த நிதி அறிக்கையிடலை உறுதி செய்வதும் இந்தப் பிரிவின் முக்கியமான பொறுப்பாகும். அதன்படி, இந்தப் பிரிவு பின்வரும் பணிகளை மேற்கொள்கின்றது.

**2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி கணக்கு விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள்**

- நிதித் திட்டமிடுகையும் மற்றும் வரவுசெலவுத்திட்டக் கட்டுப்பாடும்
- பெறுகை முறையியல்களைப் பின்பற்றி சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் பராமரித்தல், அந்த சொத்துக்களைப் பாதுகாத்தல், வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு விடயங்களை மேற்கொள்ளல், சொத்துக்கள் தொடர்பான ஆவணங்களை பேணுதல்
- வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல், முகாமைத்துவ அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அரசாங்க ஊழியர்களின் முற்பண “பீ” கணக்குகளின் மட்டுப்பாடுகளை பேணி முற்பணக் கணக்குகள் தொடர்பான வருடாந்த அறிக்கைகளைத் தயாரித்தல்
- அரச கணக்காய்வு உத்தியோகத்தர்களுடன் ஒருங்கிணைந்து வருடாந்த கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான தகவல்களையும் ஆதரவையும் வழங்குதல்.
- பிரதமர் அலுவலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்களினதும் சம்பளத்தைத் தயாரித்தல், முன்பணங்களையும் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளையும் வழங்குதல் அடங்கலாக மீண்டெழும் மற்றும் மூலதனச செலவினங்களைக் கையாளுதல்.
- அலுவலக வேலைக்குத் தேவையான நுகர்வுப்பொருட்களை வாங்குதல் மற்றும் அந்தப் பொருட்கள் தொடர்பான இருப்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

| விபரம் | 2024 ஆம் ஆண்டிற்கு மதிப்பிடப்பட்டுள்ள நிதி (ரூ.) | 2024.01.01 - 2024.12.31 ஆம் திகதி வரையான மொத்த செலவு (ரூ.) | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவு | 1,064,549,366.00 | 931,077,819.03 | 87.46% |
| மூலதன செலவு | 116,082,634.00 | 84,060,240.74 | 72.41% |

# 06 பொதுமக்கள் தொடர்புப் பிரிவு

பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு பிரச்சினை தொடர்பாக ஒரு நிவாரணத்தை எதிர்பார்த்து கௌரவ பிரதமருக்கு குறிப்பீடு செய்யப்படும், முறைப்பாடுகள், கோரல்கள் மற்றும் மனக்குறைகள் என்பன தொடர்பாக நிவாரணத்தைப் பெற்றுக் கொடுத்தல், பொதுமக்களுக்கு அரச நிறுவனங்களின் மூலம் பயனுள்ள ஒரு சேவையைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பிரச்சினைகளுக்கு விரைவாகப் பதிலளித்தல் ஆகியவற்றின் நிமித்தம் அந்தப் பிரச்சினைகளை உரிய அரச நிறுவனங்களுக்கு அனுப்பி இறுதிப் பதிலைப் பெற்றுக் கொடுக்கும் வரையில் அது தொடர்பாக பின்னூட்டல் செய்தல். பொதுமக்களினாலும், சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் பல நிறுவனங்கள் என்பவற்றினாலும் ஒப்படைக்கப்படும் மனுக்களை கௌரவ பிரதமர் சார்பாக ஏற்றுக்கொண்டு அவற்றுடன் தொடர்பான ஏனைய ஒருங்கிணைப்பு விடயங்களை மேற்கொள்ளல். தீராதுள்ள பொதுமக்கள் பிரச்சினைகள் தொடர்பான தகவல்களைப் பகுப்பாய்வு செய்து கிடைக்கின்ற பெறுபேறுகள், எடுக்கப்படும் தீர்மானங்கள் என்பவற்றை பொருத்தமான தரப்புகளுக்கு குறிப்பீடு செய்தல் முதலிய பணிகள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## 6.1 ஆலோசனைகள், கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகள் என்பவற்றை வினைத்திறன்வாய்ந்த விதத்தில் குறிப்பீடுசெய்யும் பொருட்டு தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பாடல் உத்திகள் என்பவற்றை பயன்படுத்துதல்

❖ **ஆலோசனைகள், கோரிக்கைகள்/மனக்குறைகள் என்பவற்றை குறிப்பீடுசெய்ய வேண்டிய வழிமுறை**

ஆலோசனைகள், கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகள் என்பவற்றை பயனுள்ள விதத்தில் கையாளும் பொருட்டு தொழில்நுட்பங்கள் மற்றும் தொடர்பாடல் மூலோபாயங்கள் என்பன பயன்படுத்தப்படுவதால் ஏவரேனும் ஆளொருவருக்கு தனது கோரிக்கையை தபால் மூலம் அனுப்புவதற்கு மேலதிகமாக கீழே காணப்படும் தொடர்புகளின் ஊடாக இலத்திரனியல் வழியாக சமர்ப்பிக்க வாய்ப்பு உண்டு. அதே போல் அத்தகைய நபர்களுக்கு உடனடியாக பதிலளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

secretarypr@pmoffice.gov.lk

www.pmoffice.gov.lk (பொதுமக்கள் மனக்குறைகள் இணைத்தள இணைப்பு)

+94 117481514

+94 71 999 7722

❖ **குறுஞ்செய்தி சேவைகள்**

குறிப்பீடுசெய்யப்படும் கோரிக்கைகளுடன் / மனக்குறைகளுடன் தொலைபேசி இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்குமாயின், அவற்றின் நிமித்தம் குறிப்பு இலக்கங்கள் (Reference Number) ஒரு குறுஞ்செய்தி மூலம் (SMS) வழங்கப்படும்.

❖ **2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறிவதற்கான சட்டம் பற்றிய சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை அமுல்படுத்துதல்**

பொதுமக்கள் சமர்ப்பிக்கும் ஒவ்வொரு கோரிக்கையுடனும் தொடர்புடைய ஆவணங்கள் ஸ்கேன் (Scan) செய்யப்பட்டு, மென் பிரதிகளாக (Soft Copies) ஆவண முகாமைத்துவ முறைமையில் சேமிக்கப்படும். இது எந்த நேரத்திலும் தகவல்களை சரிபார்த்து மீட்டெடுக்க உதவுகின்றது. அதன்படி, 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஏற்படுகள் அமலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

**இந்தப் பிரிவுக்கு 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரை கிடைத்த கடிதங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு:**

| # | ஊடகமூலம் | எண்ணிக்கை |
|---|---|---|
| i. | **தபால்/ தொநைகல்/ ஆள்ரீதியில் (மென்ன பிரதிகள்)** | 18,460 |
| ii. | மின்னஞ்சல்/ வட்ஸ்அப்/ மென் பிரதிகள் | 9,185 |
| | **மொத்தம்** | **27,645** |

i. புதிய கோரிக்கைகளின் எண்ணிக்கை - 12,858

ii. நிறுவனங்களிலிருந்து கிடைத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை - 8,966

iii. ஆரம்ப கோரிக்கைக்கு பதில் வழங்க முன்னர் பிரஜையால் மீண்டும் மீண்டும் விடுத்த கோரிக்கைகள் எண்ணிக்கை - 3,221

iv. மின்னஞ்சலின் ஊடாக கிடைக்கும் செயற்படுத்த முடியாத ஆவணங்களின் எண்ணிக்கை - 2600

27,645

## 01.கோரிக்கைகளின் தன்மைக்கு ஏற்ப (புதிய கோரிக்கைகள்)

| # | ஆவணங்களின் வகை | எண்ணிக்கை | முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| 1 | **வாடிக்கையாளர்கள் முகம்கொடுக்கும் பல்வேறு சிரமங்கள்** அரச ஊழியர்ளுக்கும் மற்றும் பொலிஸாருக்கும் எதிரான முறைப்பாடுகள், அரச சேவை நடைமுறைகள் தொடர்பான முறைப்பாடுகள், பொதுமக்கள் பாதுகாப்பு சூழல் மாசடைதல், போட்டிப் பரீட்சைகளை நடத்துதல்/பெறுபேறுகளை வெளியிடுதல்/ஆட்சேர்ப்பு முதலியவற்றில் ஏற்படும் தாமதங்கள் முதலியன | 3235 | 25.20% |
| 2 | **தொழில்தருநர்களின் கோரிக்கைகள்** அரச/தனியார்/முற்படை சேவைகள்/வெளிநாட்டிலுள்ள ஊழியர்கள் | 2387 | 18.60% |
| 3 | **கல்வி** உயர்கல்வி, தொழிற்கல்வி, பாடசாலை விளையாட்டுக்கள், பாடசாலை வசதிகள் மற்றும் பாடசாலைக்கு அனுமதித்தல், பொதுக் கல்வி முதலியன தொடர்பான பிரச்சினைகள் | 920 | 7.20% |
| 4 | **கௌரவ பிரதமருக்கு கிடைக்கும் வாழ்த்துச்செய்திகள், கருத்துரைகள் மற்றும் ஆலோசனைகள்.** | 1089 | 8.50% |
| 5 | **தொழில் கோரிக்கைகள்** | 883 | 6.90% |
| 6 | **காணி சம்பந்தமான பிணக்குகள்** | 828 | 6.40% |

| # | ஆவணங்களின் வகை | எண்ணிக்கை | முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| | விவசாய மற்றும் வணிக நடவடிக்கைகளுக்கான, வீடுகளை நிர்மாணிப்பதற்கான, உறுதிகள், உரித்து உறுதிகள், அளவையிடுதைல், எல்லைகளை நிர்ணயித்து வேலிகளையிடுதல் | | |
| 7 | **உட்கட்டமைப்பு வசதிகள்**<br>தண்ணீர்/மின்சாரம்/பாதைகள்/போக்குவரத்து/தொடர்பாடல் | 512 | 4.00% |
| 8 | **ஓய்வூதியம்**<br>ஓய்வூதிய சம்பளம் மற்றும் பணிக்கொடை | 462 | 3.60% |
| 9 | **நலன்புரி நன்மைகளுக்கான கோரிக்கைகள்**<br>அஸ்வெசும, சமுர்த்தி, ஊனமுற்றோரர், முதியோர், சீறுநீரக நோயாளிகள், வாழ்க்கைப்படிக் கொடுப்பனவுகள், பண்களுக்கும் சிறுவர்களுக்குமான உதவிகள், மருந்துகள் மற்றும் உபகரணங்கள் | 614 | 4.80% |
| 10 | **சமய, கலாச்சார, கலை மற்றும் விளையாட்டுக்கள்** | 295 | 2.30% |
| 11 | **கடன்களுக்கும் குத்தகைளுக்குமான நிவாரணக் கோரிக்கைகள்** | 211 | 1.60% |
| 12 | **வீடமைப்பு வசதிகள்**<br>வீடு, வீடுகளை திருத்துதல் மற்றும் புதிய நிர்மாணங்கள் | 268 | 2.10% |
| 13 | **கைத்தொழில்**<br>கடற்றொழில்/சுற்றுலா/தகவல் தொழில்நுட்பம்/ கைத்தொழில் | 63 | 0.50% |
| 14 | **விவசாயம்**<br>தண்ணீர் பிச்சினைகள், விதைகள், உரங்கள், கிருமிநாசினிகள் மற்றும் விஸ்தரிப்பு சேவைகள் | 70 | 0.50% |
| 15 | **இலக்கம் 1 முதல் 14 வரை உள்ளடங்காத ஏனைய பிரச்சினைகள்** | 1021 | 7.90% |
| **மொத்த எண்ணிக்கை** | | **12,858** | **100%** |

- **பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு/மனக்குறைகளுக்கு விரைவில் பதிலளித்தல்/தீர்வுகாணும் பொருட்டு நேரடியாக மேற்பார்வை அதிகாரிகளை நியமித்தல்**

இந்த நோக்கத்தின் நிமித்தம் அமைச்சுகள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், மாகாண சபைகள் என்பவற்றிலிருந்து தேவையான அதிகாரிகள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் கூட்டுத்தாபனங்களிலும் மற்றும் நியதிச்சட்ட சபைகளிலும் நேரடி மேற்பார்வை அதிகாரிகளை நியமிப்பதற்கான பணிகளில் சுமார் 90% நிறைவடைந்துள்ளது. அதன்படி,

- இந்த செயல்முறையின் மூலம், ஒவ்வொரு கோரிக்கையும் அந்தந்த நிறுவனங்களுக்கு மின்னஞ்சல் வழியாக மட்டுமே அனுப்பப்படும். இதன் மூலம் பொருளாதார சிக்கனம் ஏற்பட்டுள்ளது. அதனால் காகிதாதிகள் மற்றும் அஞ்சல் தொடர்பான செலவுகள் சுமார் 50% குறைந்துள்ளன.
- கோரிக்கையை சமர்ப்பித்த பிரஜைக்கு மின்னஞ்சல் முகவரி இருந்தால், அவனுக்கு /அவளுக்கு மின்னஞ்சல் மூலம் தகவல் வழங்கப்படும். மேலும் பிரஜை ஒரு வாட்ஸ்அப் இலக்கத்தை குறிப்பிட்டிருந்தால், உரிய தகவல்கள் வாட்ஸ்அப் மூலம் அவனுக்கு / அவளுக்கு அனுப்பப்படும்.
- கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகள் என்பவற்றை சமர்ப்பிப்பதற்கு மக்கள் தொடர்புப் பிரிவு ஒரு பொது வாட்ஸ்அப் இலக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

- **டிஜிட்டல் கையொப்பத்தை (Digital Signature) பயன்படுத்துதல்**

  - இது வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் அதிகரிக்கவும், எழுதுபொருட்களின் விலையை கணிசமாகக் குறைக்கவும் எமக்கு உதவியுள்ளது.

  - ஆவணங்களை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு அச்சுப் பிரதிகளைப் பயன்படுத்துவது நிறுத்தப்பட்டுள்ளது.

  - டிஜிட்டல் கையொப்பங்களைப் (Digital Signature) பயன்படுத்துவது மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ்அப் (WhatsApp) தொழில்நுட்பம் மூலம்

பொதுமக்களின் குறைகளுக்கு பதிலளிப்பதை சாத்தியமாக்கியுள்ளது. இது காகிதப் பயன்பாட்டைக் குறைக்கின்றது அல்லது நீக்குகின்றது.

இது அலுவலக உபகரணங்களையும் மற்றும் ஆவணங்களையும் பாதுகாக்க தேவையான இடத்தின் பரப்பை குறைத்துள்ளது. ஸ்கேன் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களையும் தினசரி அடிப்படையில் காப்புப் பிரதி எடுக்கும் திட்டத்தையும் தொழில்நுட்ப பிரிவு செயல்படுத்தியுள்ளது. பூர்த்தி செய்யப்பட்டுளள கோரிக்கைகள்/முறைப்பாடுகள் தொடர்பான ஆவணங்களை பிரஜைகளுக்கு அஞ்சல் மூலம் அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படும்.

- **ஒரு வட்ஸ்அப் இலக்கத்தை அறிமுகப்படுத்துதல்**

இது பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகளை உடனடியாகப் பெறுவதற்கும், தொடர்புடைய தகவல்களை சரியான நேரத்தில் வழங்குவதற்கும் உதவியுள்ளது.

## 6.2 பொதுமக்கள் தொடர்புப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டுள்ள விஷேட பணிகள்

- **வீட்டிலிருந்துகொண்டு அலுவலகக் கடமைகளை மேற்கொள்ளும் முன்னோடிக் கருத்திட்டம் (Work From Home - WFH)**

2023.10.19 ஆம் திகதி கூடிய பொதுக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில், தகவல் தொழில்நுட்பங்களை முறைமைகளைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் வருமான சேகரிப்பை பயனுள்ளதாக அதிகரிக்கும் பொருட்டு அரச ஊழியர்கள் வீடுகளிலிருந்துகொண்டு தமது அலுவலக கடமைப் பணிகளை நிறைவேற்றுவதற்கு இருக்கின்ற சாத்தியம் பற்றி ஆராயும் பொருட்டு உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி கொள்கை ரீதியான ஒரு தீர்மானத்தை எடுக்கும் சாத்தியத்தை ஆராய்ந்து பார்க்குமாறு பிரதமரின் செயலாளர் பிறப்பித்த கட்டளைக்கு இணங்க பொதுக்கள் உறவுகள் பிரிவு இந்த முன்னோடிக் கருத்திட்டத்தை செயற்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆகையால் 2024.01.22 ஆம் திகதி முதல் இந்த முன்னோடிக் கருத்திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டன. அந்த வழிகாட்டல்களுக்கு

இணங்க நடவடிக்கையை எடுத்து பொதுமக்கள் தொடர்பு பிரிவு குறித்த முன்னேடிக் கருத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்தது.

அதன்படி, பிரதமர் அலுவலகத்தின் மக்கள் தொடர்புப் பிரிவு இந்த முன்னோடிக் கருத் திட்டத்தை 2024.01.22 ஆம் திகதி முதல் 2024.06.03 ஆம் திகதி வரை நான்கு கட்டங்களாக செயல்படுத்தியது.

வீட்டிலிருந்து வேலை செய்யும் முன்னோடிக் கருத்திட்டத்தை (WFH) செயற்படுத்திய பிறகு அடையப்பட்ட மாதாந்த பணி அலகுகளின் வளர்ச்சி, WFH முன்னோடிக் கருத்திட்டத்தின் இந்தக் கட்டங்களை செயற்படுத்துவதற்கு முன்பு உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்பட்ட மாதாந்த பணி அலகுகளின் அளவுகளுடன் ஒப்பிடும்போது, பின்வருமாறு உள்ளது.

| WFH முன்னோடிக் கருத்திட்டத்தின் கட்டம் | மாதாந்த சராசரி முன்னேற்றம் |
|---|---|
| முதலாம் கட்டம் - 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி முதல் பெப்ருவரி மாதம் 19 ஆம் திகதி வரை | 61% முன்னேற்றம் |
| இரண்டாம் கட்டம் - 2024 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 26 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 26 ஆம் திகதி வரை | 64% முன்னேற்றம் |
| மூன்றாம் கட்டம் - 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி வரை | 15% முன்னேற்றம் |
| நான்காம் கட்டம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆம் திகதி முதல் ஜுன் மாதம் 03 ஆம் திகதி வரை | 17% முன்னேற்றம் |

இவ்வாறு, WFH கருத்திட்டத்தை செயற்படுத்தியதன் காரணமாக, ஒரு உத்தியோகத்தரினால் நிறைவேவற்றப்பட்ட மாதாந்த பணி அலகு அளவின் 4 ஆம் கட்டத்தின் சராசரி முன்னேற்றம் 39% வீதத்தினால் அதிகரித்துள்ளது. அதன்படி, உத்தியோகத்தர்களின் செயலாற்றுகையும் மற்றும் உற்பத்தித்திறனும் இந்த முறையியல் செயற்படுத்தப்பட்டதால் அதிகரித்துள்ளன. இந்த முன்னோடிக் கருத்திட்டத்தின் பெறுபேறுகள் உரிய அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மேலும், தண்ணீர் கட்டணம், மின்சார கட்டணம், WFH கருத்திட்ட காலத்தில் பராமரிப்பு செலவுகள், மேலதிக நேர கொடுப்பனவுகள், கணனி மற்றும்

உபகரணங்கள் பழுதுபார்க்கும் செலவுகள் என்பவற்றை கணிசமானளவு அரசாங்கத்தினால் தனது செலவுகளைக் குறைக்க முடிந்துள்ளது.

- **சிரேஷ்ட சேவையில் ஆட்சேர்ப்பு செயல்முறையை மீளாய்வு செய்ய அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழு**

அரசாங்க சேவையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஆளணிக்கு வெளியாலும் மற்றும் சரியான மனித வளங்கள் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்படாமலும் மேற்கொள்ளப்பட்ட முறையற்ற ஆட்சேர்ப்புகள் அடிப்படையில், வழமைக்கு மாறாக ஆளணியில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. தற்போதைய அனுமதிக்கப்பட்டுள்ள அரசாங்க ஆளணி எண்ணிக்கை, சர்வதேச ரீதியில் பயன்படுத்தப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறுவன மனித வளங்கள் முகாமைத்துவ ஒழுங்குக்கு இணங்க நிகழ் காலத்திற்கு பொருத்தமானவாறு சரிசெய்து கொள்ளும் பொருட்டு முன்னைய கௌரவ ஜனாதிபதி சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் எடுத்த அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் பிரதமரின் செயலாளரினது தலைமையில் ஏனைய உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டது. பொதுமக்கள் தொடர்புப் பிரிவின் மூலம் அந்தக் குழுவுக்கு வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன.

அதன்படி, முறையான மனிதவள முகாமைத்துவ அணுகுமுறையை உறுதிசெய்வதற்காக, அரசாங்க சேவையில் ஆட்சேர்ப்பு செயல்முறையை மீளாய்வு செய்வது தொடர்பாக சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் ஆகியோருக்கு வழிகாட்டல் வழங்கப்பட்டன.

குழுக் கூட்டங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள ஆளணியினுள் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக்கொள்வது பற்றி விவாத ரீதியாகவும் அறிவு ரீதியாகவும் பரிசீலிப்பதற்கு தேவையான தகவல்கள், ஆட்சேர்ப்புக்கு இணக்கப்பாட்டை பெற்றுக் கொடுக்க இந்தக் குழுவினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 07 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

பிரதமரின் செயலாளரால் சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளை வழங்குதல், பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் காலாண்டு ரீதியான மதிப்பீட்டு அறிக்கைகளை தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கும் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கும் அனுப்புதல், அந்த நிறுவனங்கள் வழங்கிய வழிகாட்டல்களுக்கு இணங்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை உரிய காலப்பகுதியினுள் நடத்துதல் முதலிய கருமங்கள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பொறுப்புப் பணிகளாகும். அதன்படி, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் பணிகள் பின்வருமாறு:

**2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31ஆம் திகதி வரை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள கருமங்கள்**

| # | நிகழ்ச்சித்திட்டம்/சந்திப்புகள் | இடம்பெற்ற திகதி |
|---|---|---|
| 01 | பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் காலாண்டு ரீதியான மதிப்பீட்டு அறிக்கையை தயாரித்து முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்புதல் | |
| | ▪ 2023ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டுக்கான மதிப்பீட்டு அறிக்கையை தயாரித்து சமர்ப்பித்தல் | 2024.01.31 |
| | ▪ 2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டுக்கான மதிப்பீட்டு அறிக்கையை தயாரித்து சமர்ப்பித்தல் | 2024.04.29 |
| | ▪ 2024 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டுக்கான மதிப்பீட்டு அறிக்கையை தயாரித்து சமர்ப்பித்தல் | 2024.07.19 |
| | ▪ 2023ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டுக்கான மதிப்பீட்டு அறிக்கையை தயாரித்து சமர்ப்பித்தல் | 2024.10.12 |

| # | நிகழ்ச்சித்திட்டம்/சந்திப்புகள் | இடம்பெற்ற திகதி |
|---|---|---|
| 02 | 2024 ஆம் ஆண்டிற்கு பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் ஆரம்ப மதிப்பீட்டு அறிக்கையை தயாரித்தல் | 2024.01.31 |
| 03 | முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் வழிகாட்டல்களுக்கு இணங்க 2024ஆம் ஆண்டின் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டுகளுக்கு முறையே கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துதல் | 2024.02.24<br>2024.06.18<br>2024.09.10<br>2024.12.17 |
| 04 | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை காலாண்டு ரீதியாக முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்புதல் (மாதிரிப்படிவம் 6)<br>▪ காலாண்டு ரீதியாக இணக்கல் அறிக்கைகளை சமர்ப்பித்தல் - 2024 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டு<br>▪ காலாண்டு ரீதியாக இணக்கல் அறிக்கைகளை சமர்ப்பித்தல் - 2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டு<br>▪ காலாண்டு ரீதியாக இணக்கல் அறிக்கைகளை சமர்ப்பித்தல் - 2024 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டு<br>▪ காலாண்டு ரீதியாக இணக்கல் அறிக்கைகளை சமர்ப்பித்தல் - 2024 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டு | <br>2024.02.31<br>2024.06.26<br>2024.09.13<br>2024.12.17 |
| 05 | கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்களை பரிசீலித்தல் - ( 2023ஆம் ஆண்டு திசம்பர் மாதம்) | 2024.01.01-2024.03.31 |
| 06 | உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் கணக்காய்வு அவதானிப்புகளை சிபாரிசுகளுடன் பிரதமரின் செயலாளருக்கு அறிக்கையிடுதல்<br>• தனியாள் கோவைகளை பேணுவது தொடர்பான உள்ளகக் கணக்காய்வு விசாரணை | <br>2024.02.07 |

| # | நிகழ்ச்சித்திட்டம்/சந்திப்புகள் | இடம்பெற்ற திகதி |
|---|---|---|
| | • அரசாங்கத்தின் சம்பளக் கொடுப்பனவு கணனி நிகழ்ச்சித்திட்டம் பற்றிய உள்ளகக் கணக்காய்வு விசாரணை | 2024.02.21 |
| | • அரசாங்க ஊழியர்களின் “பீ” முற்பணக் கணக்குகளை பரிசீலித்தல் | 2024.05.28-2024.06.06 |
| | • சிறு நிதி முகாமைத்துவம் பற்றிய கணக்காய்வு விசாரணை | 2024.05.10-2024.05.06 |
| | • அரசாங்கத்தின் சம்பளக் கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம் (GPS)உள்ளகக் கணக்காய்வு விசாரணை | 2024.06.12 |
| | • கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்களைப் பரிசீலித்தல் | 2024.05.30-2024.06.12 |
| | • தகவுடைய அதிகாரிகளின் தனியாள் கோவைகளைப் பேணுவது பற்றிய உள்ளகக் கணக்காய்வு விசாரணை | 2024.07.17 |
| | • தொலைபேசி மற்றும் வலையமைப்பு வசதிகளை வழங்குவது தொடர்பான கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்களை துல்லியமாக பரிசீலித்தல் | 2024.07.24 |
| | • அரச ஊழியர்களுக்கு விழா முற்பணங்களையும் மற்றும் இடர் கடன்களையும் பெற்றுக் கொடுப்பது பற்றிய உள்ளகக் கணக்காய்வு விசாரணை | 2024.08.15 |
| | • காகிதாதிகள் மற்றும் அலுவலகப் பொருட்கள் தொடர்பாக செய்த கொடுப்பனவுகளை பரிசீலிப்பது பற்றிய உள்ளகக் கணக்காய்வு விசாரணை | 2024.08.16 |

| # | நிகழ்ச்சித்திட்டம்/சந்திப்புகள் | இடம்பெற்ற திகதி |
|---|---|---|
| | • வாகனங்களின் பராமரிப்பு செலவுகள் தொடர்பான கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுக்களை துல்லியமாகப் பரிசீலனை செய்வது பற்றிய உள்ளகக் கணக்காய்வு விசாரணை<br>• இலங்கையின் வங்கிகளுக்கு இடையில் மேற்கொள்ளப்படும் வங்கிக் கொடுப்பனவுகள் (SLIPS)முறையியலுக்கு இணங்க சம்பளக் கொடுப்பனவுகளை பரிசீலிப்பது பற்றிய உள்ளகக் கணக்காய்வு விசாரணை<br>• தகவுடைய அதிகாரிகல்லாத உத்தியோகத்தர்களின் தனியாள் கோவைகளைப் பரிசீலித்தல்<br>• வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்புப் பணிகளையும் மற்றும் அகற்றல் விடயங்களையும் பரிசீலித்தல்<br>➢ கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுக்களை பரிசீலித்தல் - 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்<br>➢ வாகனங்கள் விபத்துக்குள்ளாகுதல் – 2024<br>➢ பிரதமரின் தனிப்பட்ட பதவியணியினருக்கான சம்பளக் கொடுப்பனவுகளை பரிசீலித்தல் | 2024.08.30<br>2024.09.06<br>2024.10.29<br>2024.12.05<br>2024.12.10<br>2024.12.11<br>2024.12.11 |
| 07 | 2025ஆம் ஆண்டிற்கு உள்ளகக் கணக்காய்வு உறுதிமொழி ஆவணத்தைத் தயாரித்தல் | 2024.10.14 |
| 08 | Risk Appetite Statementஅறிக்கையைத் தயாரித்தல் | 2024.11.20 |
| 09 | இடர் மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல் | 2024.11.20 |
| 10 | 2025 ஆம் ஆண்டிற்கான இடர் ஆவணங்களைத் தயாரித்தல் | 2024.11.20 |
| 11 | 2025 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல் | 2024.11.25 |

## 08 சட்டப் பிரிவு

இந்தப் பிரிவு கௌரவ பிரதமரின் விடயப்பரப்பினுள் வருகின்ற பல்வேறு சட்ட விடயங்களையும் மற்றும் கௌரவ பிரதமரால் வகிக்கப்படும் அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சுக்கள் தொடர்பான சட்ட விடயங்களையும் ஒருங்கிணைப்பு செய்கின்றது.

**2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் சட்ட விவகாரங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள விடயங்கள்**

❖ உயர் நீதிமன்றம், மேல்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் ஏனைய நீதிமன்றங்கள் என்பவற்றில் பிரதமரை மற்றும்/அல்லது பிரதமரின் செயலாளரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் ஏனைய பிற தொடர்புடைய தரப்புகள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

❖ 2024 ஆம் ஆண்டிற்கு சட்டப் பிரிவுக்கு கிடைத்த வழக்குகளுக்கான அழைப்பாணைகளின் எண்ணிக்கை பின்வருமாறு.

a. உயர்நீதிமன்ற வழக்குக் கோவைகள - 36
b. மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குக் கோவைகள் - 08

❖ மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழக்குக் கோவைகள் தொடர்பான அனைத்து பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.மேலும் தொடர்புடைய வரைவுகள் சட்டமா அதிபரின் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி தேவையான போது, சட்டமா அதிபருக்கு அவதானிப்புகளும் மற்றும் பதில்களும் வழங்கப்பட்டுள்ளன.

❖ கௌரவ பிரதமர் கலந்து கொள்ளும் சட்ட விடயங்கள் தொடர்பான கூட்டங்கள், விஷேட கூட்டங்கள் முதலிய கூட்டங்களுக்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

❖ கௌரவ பிரதமர் சமர்ப்பித்திருந்த அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- ❖ பிரதமர் அலுவலகம் குத்தகைக்கு விடுவதற்கு முன்மொழிந்த கட்டிட வளாகத்திற்கான வரைவு குத்தகை ஒப்பந்தங்களும் மற்றும் ஏனைய பிற வரைவு ஒப்பந்தங்களும் பகுப்பாய்வு செய்யப்பட்டு சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

- ❖ சட்டப் பிரிவுக்கு கிடைத்த பல்வேறு கோவைகள் கண்காணிக்கப்பட்டு, தொடர்புடைய குறிப்புகள் மற்றும் சிபாரிசுகள் என்பன சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 09 ஊடகப் பிரிவு

"வளமான ஒரு நாடு மற்றும் அழகான ஒரு வாழ்க்கை'' என்ற கொள்கைக் கூற்றுக்கு இணங்க நாட்டினுள் மாற்றத்தை ஏற்படுத்த பொருளாதார மாற்றத்தையும் மற்றும் அதற்கு இணையாக சமூக மற்றும் தனிநபர் மனோபாவங்களில் மாற்றத்தையும் ஏற்படுத்துவது அத்தியாவசிய அம்சம் என அவதானிக்கப்படுகின்றது. மேலும் பல நெருக்கடிகளுக்கும் மற்றும் சவால்களுக்கும் முகம்கொடுத்துள்ள நாட்டை சரியான ஒரு பாதையில் பயணிக்கச் செய்வதற்கு தேவையான காலத்திற்குகந்த நடவடிக்கைகளையும் தாமதியாது மேற்கொள்ள வேண்டியுள்ளது. பொதுமக்களை மையமாகக் கொண்டமைந்த ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் முடிவுகள் மற்றும் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் என்பன தொடர்பாக மக்கள் மத்தியில் சரியான மனோபாவத்தை ஏற்படுத்துவதற்கும் மற்றும் மக்களுக்கு சரியான தகவல்களை தொடர்பாடல் செய்வதற்கும் பிரதமரின் ஊடகப் பிரிவு நிதமும் தனது சேவையை வழங்கி வருகின்றது. மேலும் ஊடகங்களின் பாவனை தொடர்பாக நிதமும் கவனம் செலுத்தி பின்னூட்டல் செய்வதன் ஊடாக பொய்யான தகவல்களுக்குப் பதிலாக சரியான தகவல்களை மக்கள்மயப்படுத்துவதையும் இந்தப் பிரிவு மேற்கொள்கின்றது. கௌரவ பிரதமர் அவர்களினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் முடிவுகள், இராஜதந்திர சந்திப்புகள், பொது வைபவங்களில் கலந்துகொள்ளல், பாராளுமன்ற செய்திகள் மற்றும் தீர்மானமிக்க கலந்துரையாடல்கள் என்பன பற்றிய தகவல்கள் அடங்கலாக எல்லா தகவல்களையும் மற்றும் தகவல் பரம்பல்களையும் உரிய நேரத்தில் ஊடகங்களில் அணவுதல், ரூபவாஹினி, செய்திப்பத்திரிகைகள், வானொலி, இணையத்தளம், இணையத்தள ப்லொக் மற்றும் ஊடகங்கள் என்பவற்றுக்கு செய்தி அறிவித்தல்களை வெளியிடுதல் மற்றும் செய்திகளை பின்னூட்டல் செய்தல் முதலிய கருமங்கள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதே போல் பல ஊடகங்களின் ஊடாக வெளியாகும் பொய்யான மற்றும் முழுமையற்ற செய்திகள் தொடர்பாக அவதானித்து அவற்றை சரிபடுத்துதல், விஷேட தினங்கள் மற்றும் வைபவங்கள் என்பவற்றை முன்னிட்டு கௌரவ பிரதமரின் வாழ்த்து செய்திகளை அனுப்புதல் அடங்கலாக கரும பணிகளும் இந்த ஊடகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**2024.10.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் ஊடகப் பிரிவின் மூலம் கீழ்காணும் கரும பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

| # | நிறைவேற்றிய கருமங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஊடக அறிவித்தல்கள் | 110 |
| 2. | வாழ்த்துச்செய்திகள் | 11 |
| 3. | செய்திகள் மற்றும் அறிவித்தல்கள் அச்சீட்டு ஊடக செய்திகள் (செய்திகளும் அறிவித்தல்களும் மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டன) | 460 |
| 4. | வானொலி செய்திகள் | 186 |
| 5. | தொலைக்காட்சி ஊடக செய்திகள் | 206 |
| 6. | இணைத்தளத்தில் வெளியாகிய செய்திகள் | அண்ணளவாக ஆயிரம் |
| 7. | பிரமர் அலுவலகத்தின் இணையத்தளம் வெளியிட்டுள்ள செய்திகள் | 105 |
| 8. | பிரமர் அலுவலகத்தின் இணையத்தளம் வெளியிட்டுள்ள செய்திகள் | 11 |
| 9. | முகநூல் பகத்தில் (Face Book) வெளியிடப்பட்டுள்ள செய்திகள் | 130 |

இவை தவிர, பண்டிகை நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், ஊடகங்களை அழைத்தல் மற்றும் முன் கண்காணிப்பு நடவடிக்கைகள் முதலிய கருமங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரதமர் கலந்து கொண்ட பல்வேறு நிகழ்வுகளையும் மற்றும் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளின் காணொளிகளையும் புகைப்படங்களையும் ஊடக பிரிவு சேமித்து வெளியிடுகின்றது. அச்சு ஊடகங்கள், தொலைக்காட்சி மற்றும் இணையத்தளங்கள் என்பவற்றில்

வெளியிடப்படும் செய்திகளை ஊடகப் பிரிவு பாதுகாத்து செய்தி கோப்புகளாக தொகுத்து வழங்ககின்றது.

**2024.10.01 ஆம் திகதி முதல் 2024.12.31ஆம் திகதி வரை ஊடகப் பிரிவு நிறைவேற்றிய கருமபணிகளும் அவற்றின் முன்னேற்றமும் பற்றிய விபரங்கள்**

| # | ஊடகப் பிரிவு அணவிய கருமபணிகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பிரதமர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்களையும் மற்றும் காணொளிகளையும் காப்பகப்படுத்துதல் மற்றும் சேமித்தல்.<br>1) புகைப்படங்கள் அடங்கிய கோவை<br>11) வீடியோக்கள் அடங்கிய கோவை | 81<br>127 |
| 02 | செய்திகளையும் விஷேட நிகழ்ச்சிகளையும் தயாரித்தல் மற்றும் ஊடகங்களுக்கு செய்திகளை வெளியிடுதல் | 110 |
| 03 | விஷேட ஆவணங்களை (செய்திப்பத்திரிகைகள்)தயாரித்தல் | 03 |
| 04 | ஊடக அணவல்களுக்கு ஊடகங்களை அழைத்தல் | 03 |
| 05 | விஷேட தினங்கள் தொடர்பாக பிரதமரின் செய்திகளை ஊடகங்களுக்கு வெளியிடுதல் | 11 |
| 06 | பிரதமர் கலந்து கொள்ளும் விஷேட நிகழ்வுகளை முன் கண்காணித்து முழுமையாக கலந்துரையாடுதல் | 12 |
| 07 | வெளிநாட்டு தூதுவர்களையும் மற்றும் பிரதிநிதிகளையும் சந்தித்த சந்தர்ப்பங்கள் | 44 |
| 08 | பிரதமரின் விடயப்பரப்பு தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய அச்சீட்டு ஊடகங்களில் வெளியாகிய அறிக்கைகளையும் மற்றும் சமூகப் பொருளாதார பிரச்சினைகள் பற்றிய செய்திகளையும் மற்றும் இணையத்தளத்தில் வெளியாகிய செய்திகளையும் ஒரு கோவையாக தொகுத்து பிரதமருக்கும் மற்றும் பிரதமரின் செயலாளருக்கும் அனுப்பி வைத்தல் | 79 |
| 09 | பிரதமர் அலுவலகத்தின் இணையத்தள செய்திகளை இற்றைப்படுத்துதல் | 105 |

| # | ஊடகப் பிரிவு அணவிய கருமபணிகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 10 | ஊடகப் பிரிவின் உத்தியோகபூர்வ முகநூல் (FB) பக்கத்தை இற்றைப்படுத்துதல் | 132 |
| 11 | செய்திகளை பின்னூட்டல் செய்த சந்தர்ப்பங்கள்<br>1)இலத்திரனியல் செய்திகள்<br><br>11) தொலைக்காட்சி செய்திகள்<br><br>111) இணையத்தளம் மற்றும் ப்லொக் இணையத்தளம் | 1325<br><br>460<br><br>1050 |

**<u>2024.01.01 ஆம் திகதி முதல் 2024.09.30ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் ஊடகப் பிரிவு நிறைவேற்றியுள்ள செயற்பாடுகள்</u>**

| # | ஊடகப் பிரிவு அணவிய கருமபணிகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | தேசிய வைபவங்கள் மற்றும் விஷேட நிகழ்ச்சிகள் | 156 |
| 02 | பிரதமர் கலந்து கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தரவுகளைப் பாதுகாத்துக் களஞ்சியப்படுத்துதல்<br>I) புகைப்படங்கள் அடங்கிய கோவை<br>II) வீடியோக்கள் அடங்கிய கோவை | 639 |
| 03 | செய்திகள் மற்றும் விஷேட தயாரிப்புகள் | 400 |
| 04 | ஊடகங்களுக்கு செய்திகளை வெளியிடுதல் | 303 |
| 05 | விஷேட ஆவணங்களை தயாரித்தல்<br>ஊடகங்கள் கேட்டுக்கொள்ளும் தகவல்களை வழங்குதல் | 130<br>119 |
| 06 | I)செய்திப்பத்திரிகை விடயங்கள் மற்றும் விஷேட செய்திகள் என்பவற்றை மொழிபெயர்த்தல் | 381 |
| 07 | ஊடக அணவல்களுக்கு ஊடகங்களை அழைத்தல் | 64 |
| 08 | இணையத்தளத்திலுள்ள செய்திகளை இற்றைப்படுத்துதல் | 401 |
| 09 | வாழ்த்துச்செய்திகளை அனுப்புதல் | 201 |
| 10 | அனுதாபச்செய்திகளை அனுப்புதல் | 101 |

| # | ஊடகப் பிரிவு அணவிய கருமபணிகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 11 | செய்திகளை உரிய இடங்களுக்கு குறிப்பீடுசெய்தல் | 345 |
| 12 | விஷேட தினங்கள் தொடர்பாக பிரதமரின் செய்திகளை ஊடகங்களுக்கு வெளியிடுதல் | 20 |
| 13 | தர்ம தீபனி போதா நிகழ்ச்சித்திட்டம் | 09 |
| 14 | புத்த சமய,கலாச்சார மற்றும் மத வைபவங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 09 |
| 15 | வைபவங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் பூர்வாங்க கலந்துரையாடல்களை மேற்கொள்ளல் | 36 |
| 16 | I)பிரதமரின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டிய அச்சீட்டு ஊடகங்களில் வெளியாகிய அறிக்கைகளை அவதானித்து அவை தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்தல் | 133 |
| | II) இலத்திரனியல் ஊடகங்களில் வெளியாகிய அறிக்கைகளை அவதானித்து அவை தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்தல் | 03 |
| | III) இணைத்தளத்தில் வெளியாகிய அறிக்கைகளை அவதானித்து அவை தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்தல் | 04 |
| | IV) செய்திப் பதிரிகைகளிலும் மற்றும் இணையத்தளங்களிலும் வெளியாகிய செய்திகளின் அளவை உள்ளிட்டு நாளாந்த அறிக்கைகளையும் மற்றும் வாராந்த அறிக்கைகளையும் தயாரித்தல் | 261 |
| 17 | சமூக ஊடக முகநூலை (FB) இற்றைப்படுத்துதல் | 185 |